இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 238 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(23.05.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 02, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only)
Cash or Card
*Conditions apply

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74



## பணவீக்கம் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி கடந்த மார்ச் மாதம் 49.2 வீதமாக பதிவாகியிருந்த பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 33.6 வீதமாக குறைவடைந்துள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உணவுப் பணவீக்கம் கடந்த மார்ச் மாதம் 42.3 வீதமாக இருந்ததுடன் ஏப்ரல் மாதம் 27.1 வீதமாகக் குறைவடைந்துள்ளது. உணவல்லாத பணவீக்கம் மார்ச் மாதம் 54.9 வீதமாகக் காணப்பட்டது. அது ஏப்ரலில் 39 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கியிருந்தது. அந்த உடன்படிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பணவீக்கம் வீழ்ச்சியடைவதாக பொருளியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# பொதுவான நினைவுகூரல்!

## போர், வன்முறைகளில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த புதிய நடைமுறை ஒன்றுக்கான அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்தார் ரணில்

**நமது அரசியல் செய்தியாளர்**

ஆயுதப்போராட்டம், உள்நாட்டுப் போர், அரசியல் அசம்பாவிதங்கள், கலவரங்கள் மற்றும் வன்முறைகளால் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் வகையில் பொதுவான தினமொன்றை குறிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (22) கோரியுள்ளார்.

இதன்படி, 1983ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டுவரை மேற்படி காரணங்களால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினமொன்றை பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை அவர் கோரியுள்ளார். ஜனாதிபதியின் இந்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அஞ்சலி செலுத்துவதற்குரிய திகதி அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுமென அறியமுடிகின்றது.

அதேபோல் இவ்வாறு அஞ்சலி செலுத்துவதற்குரிய இடமொன்று கொழும்பில் தெரிவுசெய்யப்பட்டு நினைவுத்தூபி ஒன்றை நிர்மாணிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் பலதரப்பிலும் கடந்த காலங்களில் உயிரிழந்தோர் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டதால், இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்வகையில் பொதுவான தினத்தில் அதனை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி அமைச்சரவையிடம் பரிந்துரைத்துள்ளார்.



## இன்று கூடுகிறது பாராளுமன்றம்

பாராளுமன்ற அமர்வுகள் இன்றுமுதல் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

அதற்கமைய இன்று மு.ப. 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப. 10.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின்கீழ் 2312/67ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2312/68 67ஆம் இலக்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் 2312/70ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதுமாத்திரமன்றி, புகையிலை வரி (திருத்தச்) சட்டத்தின்கீழ் 2312/71ஆம் இலக்க வர்த்தமானியில்... 02 பக்கம்

## அமரவீர, திலங்கவின் செயலாளர் பதவியை ஏற்றுக்கொள்ள முடியாது





### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் பதவியை வகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இருதரப்பு... 02 பக்கம்




## கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கு 50 பிராந்திய அலுவலகங்கள்

### 03 நாட்களில் வழங்கும் நடைமுறை அமுலாகிறது



**நமது நிருபர்**

பொதுமக்களின் நலன்கருதி கடவுச்சீட்டு வழங்கும் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக நாடு முழுவதும் 50 புதிய பிராந்திய அலுவலகங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று (22) அறிவித்தார். அமைச்சின் கேட்போர் கூடத்தில்... 02 பக்கம்

## கல்விச் சேவையாளர்கள் இன்று போராட்டத்தில்

நாடு முழுவதிலும் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களில் பணியாற்றும் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இன்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் தம்மிக மிரிஹான தெரிவித்தார்.

ஆசிரிய கல்விக்கான... 02 பக்கம்



## எரிபொருள் விநியோகத்துக்கு சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம்

நாட்டின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக் உடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று (22) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மின்சக்தி மற்றும்... 02 பக்கம்

## சாதாரண தர மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் தடை

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், விரிவுரைகள் ஆகியவற்றுக்கு இன்று முதல் தடைவிதிக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அது மாத்திரமன்றி, சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள், கையேடுகளை அச்சிடுதல், விநியோகித்தல், இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தல் ஆகியவற்றுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

## திடீரென சுகயீனமுற்ற ஸ்ரீபாத மாணவர்கள்

### 92 பேருக்கு வைத்தியசாலையில் சிகிச்சை

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல்கல்லூரியில் பயிற்சி பெறும் 92 மாணவர்கள் திடீர் சுகயீனமுற்ற நிலையில் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். 02 பக்கம்

## ஜனகவுக்கு எதிரான பிரேரணை எதிர்த்து வாக்களிக்க தயாராகும் கட்சிகள்

**கே. சுபானி**

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவிநீக்கம் செய்வது தொடர்பிலான பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க பல அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. 02 பக்கம்

## கனேடிய தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

### அந்நாட்டுப் பிரதமரின் கருத்தை மீளப் பெற வலியுறுத்து




02 பக்கம்



**உஷ்**

எதிர்க்கட்சி எம்.பிக்களான ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம் ஆகியோர் ஜனாதிபதி ரணிலை நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி வெளிநாடு செல்வதற்கு முன்னர் அவரை இந்த எம்.பிக்கள் சந்தித்ததன் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய குடியரசு முன்னணி என்ற புதிய அரசியல் கட்சி மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

(படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

**கமெண்ட் கந்தர்...**

அஞ்சலி செலுத்துறதுக்கு ஒரு தினமா? ரணில் ஐயா வேறென்னென்ன தினங்களையெல்லாம் அறிவிக்கப் போறாரோ தெரியேல்ல..!



# ‘அவதானமாக செயற்படுங்கள்’ மட்டக்களப்பு பொலிஸார் மாணவர்களுக்கு அறிவுறுத்து

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் ‘பாடசாலை மாணவர்களுக்கான அறிவித்தல்’ எனும் தலைப்பில் நாட்டில் அண்மைக்காலமாக சிறுவர் கடத்தல் அதிகரித்துள்ளது. எனவே, பாடசாலை மாணவர்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் கொண்ட துண்டுப்பிரசுரம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை (22) விநியோகித்துள்ளனர்.

பாடசாலை முடிந்தவுடன் மாணவர்கள் அநாவசியமாக வெளியில் நிற்காமல் வீட்டுக்கு உடன் செல்ல பணிப்புரை வழங்கல், அடையாளந் தெரியாதோர் உண்பதற்கு ஏதாவது கொடுத்தால் வாங்க வேண்டாம் எனவும் இதில் கோரப்பட்டுள்ளது.

மேலும், அடையாளந்தெரியாதோர் வாகனங்களில் ஏற்றிச் சென்று வீடுகளுக்கு விடுகின்றோம் என்றால் வாகனங்களில் ஏற வேண்டாம் எனவும் மாணவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் இது தொடர்பாக பெற்றோருக்கு தெரியப்படுத்துமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகத்துக்கிடமாக யாராவது நடமாடினால் பொலிஸ் அவசர தொலைபேசி அழைப்புக்கு அல்லது 065 2224356, 065 2224422 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு துண்டுப்பிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# தனது 3 வயது குழந்தையை தரையிலடித்த தந்தை கைது

## அவிசாவளையில் சம்பவம்

அவிசாவளை, தல்துவ பிரதேசத்தில் மூன்று வயது குழந்தையை தூக்கி தரையிலடித்த குற்றச்சாட்டில் தந்தையொருவர் நேற்று (22) கைது செய்யப்பட்டுள்ளதாக அவிசாவளை பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவிசாவளை மேல் தல்துவ, தல்துவ தோட்டத்தில் வசிக்கும் மேற்படி சந்தேகநபர், குழந்தையை தரையிலடித்துவிட்டு அவரது மனைவி முன்னிலையில் விஷம் குடித்துள்ளார். இதனையடுத்து பிரதேசவாசிகள் குறித்த குழந்தை மற்றும் சந்தேகநபரான தந்தையை மீட்டு அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சந்தேகநபரான தந்தை சிகிச்சைகளின் பின்னர் தப்பியோட முயற்சித்தவேளை அவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்துள்ள குழந்தையின் தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதுடன் காதில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளநிலையில் முதற்கட்ட சிகிச்சைகளின் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபரான தந்தை அவிசாவளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம்




*யாழ். செய்தியாளர்*

யாழ்ப்பாணம், தையிலிட்டியில் பொதுமக்களின் காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரையை அகற்றக்கோரி நேற்று (22) மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த முன்னணியின் பேச்சாளர் க.சுகாஸ், நாங்கள் பௌத்த விகாரைகளுக்கு எதிராக போராடவில்லை. யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு எதிராக போராடவில்லை. எமது நிலங்களை அபகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரைகளையே எதிர்க்கிறோம். எமது போராட்ட நியாயங்களை அஸ்கிரிய, மல்வத்து பீட மகாநாயக்கர்கள் புரிந்துகொண்டு, சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக எம்முடன் இணைந்து போராட முன்வர வேண்டும் என்றார்.

## ஜனகவுக்கு எதிரான...

அதன்படி ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் உத்தர லங்கா சபை உள்ளிட்ட கட்சிகள் இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளன.

இந்நிலையில் மேற்படி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் இன்று (23) அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிக்கையில்,

‘‘கட்சியின் அனைத்து குழுவினருடனும் கலந்துரையாடிய பின்னரே எமது தீர்மானம் குறித்து அறிவிக்கப்படும்’’ என்றார்.

மேலும், ‘‘மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக நின்ற ஜனக ரத்நாயக்கவுக்கு ஆதரவாக நிற்க எமது கட்சி தீர்மானித்துள்ளது’’ என ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம், ‘‘ஜனக ரத்நாயக்கவின் செயற்பாடுகளை ஒரு கட்சி என்ற ரீதியில் நாம் அங்கீகரிக்கவில்லை’’ என தெரிவித்துள்ளார்.

அத்தோடு சுதந்திர மக்கள் சபை சார்பில் மேற்குறித்த பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதாக பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

மக்களின் பக்கமிருந்து கருத்துகளை முன்வைத்துவரும் ஜனக ரத்நாயக்க மீது அரசாங்கம் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவரின் கடமைக்கு குந்தகம் விளைவித்து வருகிறது. சுயாதீன நிறுவனங்களுக்கு எதிரான இவ்வாறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதற்கு இடம்கொடுக்கக்கூடாது என உத்தர லங்கா சபையின் சார்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அப்பதவியிலிருந்து நீக்குவது தொடர்பிலான பிரேரணை தொடர்பிலான விவாதம் நாளை (24) இடம்பெறவுள்ளதுடன் அன்றையதினம் மாலை பிரேரணை தொடர்பிலான வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

ஜனக ரத்நாயக்கவை பதவிநீக்குவது தொடர்பிலான பிரேரணை அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதுதொடர்பில் பாராளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளரும் அரசியலமைப்பு விவகார பணிப்பாளருமான ஜனகாந்த டி சில்வாவிடம் வினவியபோது, தீர்மானம் நிறைவேற்றப்பட 113 உறுப்பினர்களின் வாக்குகள் போதுமானது என தெரிவித்தார்.

அண்மைகாலமாக ஜனக ரத்நாயக்க மற்றும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளால் சர்ச்சைக்குள்ளாகியிருந்தனர்.

## எரிபொருள்...

எரிசக்தி அமைச்சின் செயலாளர் எம்.பி.டி. யூ.கே.மாபா பதிரனவும் சினோபெக் நிறுவன எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோக திணைக்கள முகாமைத்துவப் பணிப்பாளர் சென் சென்க்மிம் ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கையில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்காத வகையில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு இந்த முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஓயில் கம்பனி ஆகியவை கடந்த காலத்தில் எரிபொருள் ஏற்றுமதிக்கு போதுமான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் சவாலை எதிர்கொண்டன. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு பல்வேறு உத்திகள் குறித்து ஆராய்ந்ததுடன், எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற பெற்றோலிய நிறுவனங்களிடமிருந்து இலங்கைக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வது குறித்தும் ஆராய்ந்தது.

நாட்டில் செயற்படும் விநியோக விற்பனை முகவர் வலையமைப்புகள் மூலம் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்வதே இதன் நோக்கமாக இருந்தது. அதற்கமைய, இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இங்கு, சந்தையில் நுழையும் புதிய சில்லறை விநியோகஸ்தர்களுக்கான முக்கிய நிபந்தனைகளில், உள்நாட்டு வங்கிகளில் தங்கியிருக்காமல் அந்நியச் செலாவணித் தேவைகளை தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும் என்பது பிரதானமானதாகும். அதன்படி, இந்த நிறுவனங்கள் குறைந்தபட்சம், செயற்படத் தொடங்கி ஆரம்ப ஓராண்டு காலத்தில் வெளிநாட்டுமூலங்கள்மூலம் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைக்கப்பட்டன.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகியவை குறித்த முன்மொழிவுகளை ஆய்வு செய்து, பேச்சுவார்த்தைகளுக்கு உட்பட்டு பின்வரும் நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க பரிந்துரைத்தன.

சினோபெக் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு 45 நாட்களுக்குள் இலங்கையில் செயற்படத் தொடங்கும். இந்த செயல்முறையானது மிகவும் நிலையான மற்றும் நம்பகமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதோடு நாட்டின் எரிசக்தித் துறையை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான டி.வி. சானக, இந்திக அனுருந்த, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சீனத் தூதுவர் குய் சென்ஹோங் மற்றும் சினோபெக் ஓயில் லங்கா தனியார் நிறுவன தலைவர் யூ பவோசாய், சர்வதேச ஒத்துழைப்புத் திணைக்களப் பணிப்பாளர் பன் லிபிங் உள்ளிட்ட பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## திடீரென சுகயீனமுற்ற...

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றோரில் 10 பேர் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் ஏனையோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்டு வெளியேறியுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் ஏதேனும் வைரஸ் நோய் பரவுகின்றதா என்பது தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வைத்தியர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு நேற்று சென்ற சுகாதார அதிகாரிகள் அங்கு பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களின் இரத்த மாதிரிகளும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமரவீர, திலங்கவின்...

தகவல்களை ஆராய்ந்து வருவதாக சட்ட, புலனாய்வுப் பிரிவின் மேலதிக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும், இந்த விவகாரம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதால் தீர்ப்பு வழங்கப்படும் வரை இருவரையும் செயலாளராக ஏற்றுக்கொள்வதை இடைநிறுத்துவதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு இது குறித்து விளக்கமளித்து தேர்தல் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அக்கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்குவதற்கு கடந்த வருடம் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அலகியவண்ண, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜகத் புஷ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் கட்சியின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டதுடன் அதன் மத்திய குழு உறுப்புரிமையும் பறிக்கப்பட்டது.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவை நியமிக்க கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாக தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

## சாதாரண தர...

எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ இந்த உத்தரவை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஜூன் 08ஆம் திகதிவரை மூவாயிரத்து 568 பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெயர் மாற்றம்

இல 110/B சேர்கிளார் வீதி, தோணிக்கல், வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 198212903090 ஐ கொண்ட ஜெயராம் சுரேஸ் அகிய நான் 2001 ஆம் ஆண்டிலிருந்து எனது பெயரை ஜெயராம் சுரேஸ் அஹமட் ஆக மாற்றி உள்ளேன். அன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்தி வருகிறேன் எனவும் இத்தால் சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

ஒப்பம்
**ஜெயராம் சுரேஸ் அஹமட்**

## கனேடிய...

முப்படையினரும் பொலிஸாரும் தமிழினப் படுகொலையை மேற்கொண்டதாக கனேடிய பிரதமர் தெரிவித்த கருத்தை மீளப்பெற வலியுறுத்தி கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகரகத்துக்கு முன்பாக நேற்று (22) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. காலிமுகத்திடல் மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் உயர்ஸ்தானிகரகத்துக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட காலிமுகத்திடல் மக்கள் அமைப்பின் உறுப்பினர் பலாங்கொட கஸ்வத்த தேரர்,

இலங்கையில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தமிழினப் படுகொலை செய்துள்ளனர் என கனேடிய பிரதமர் தெரிவித்திருந்தார். இவ்வாறான கருத்துக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பதிலளிக்க வேண்டியதில்லை. மாறாக ஜனாதிபதியும் பிரதமரும் நேரடியாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவித்திருக்க வேண்டும்.

கனேடிய பிரதமரின் ஆதாரமற்ற கருத்துகளை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். அதனை வெளிப்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கனடா அறியாத பல தகவல்களை நாம் இந்த மகஜரில் உள்ளடக்கியுள்ளோம்.

தலதா மாளிகை மீதான தாக்குதல்கள், ஸ்ரீமகா போதி தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அந்த சந்தர்ப்பத்தில் தமது குடும்பத்தினரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குடும்ப அங்கத்தவர்கள் வெவ்வேறு பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களின் காரணமாக எமக்கும் பதில் தாக்குதல்களை நடத்த வேண்டியேற்பட்டது. இறுதியில் அனைத்து இன மக்களும் அழிவை எதிர்கொண்டனர். இவற்றை ஜனாதிபதியும் பிரதமரும் கனடாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ஏன் அமைதி காக்கின்றார்?

சிங்கள பௌத்த மக்களை இனவாதிகளெனக் குறிப்பிட்டு, எமக்கு கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை மறுக்கின்றனர். ஜனாதிபதியும் பிரதமரும் இது குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்காவிட்டால் நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று உரிய நடவடிக்கைகளை எடுப்போம். எனவே கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்துகளை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்றார்.

## இன்று கூடுகிறது...

பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2312/73ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2316/32ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி, 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2309/37 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பனவும் அன்றையதினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், பி.ப 5.00 மணிமுதல் 5.30 மணி வரை ஆளுந்தரப்பினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர் ஜே.டபிள்யூ.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்கவை அந்த உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கான உரை நிறைவேற்றப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மே மாதம் 22ஆம் திகதியிலிருந்து ஓய்வுபெறவுள்ள பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவின் சேவையைப் பாராட்டி பாராட்டுப் பிரேரணைக்காக நாளைமறுதினம் வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரையான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பி.ப. 12.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான 2309/37ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2312/80ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2312/69ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2312/69ஆம் இலக்க மற்றும் 2318/53ஆம் இலக்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் என்பன அங்கீகரிக்கப்படவுள்ளன.

அத்துடன், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் செக் குடியரசு அரசாங்கத்துக்கும் இடையில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமான 2023 பெப்ரவரி 03ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமும் அன்றையதினம் அங்கீகரிக்கப்படவுள்ளது.

அதன்பின், மாலை 5.00 மணிமுதல் 5.30 மணிவரை, எதிர்க்கட்சிகள் கொண்டு வரும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மறைந்த முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பிரேரணைக்கு 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாள் முழுவதையும் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அன்றைய தினம் காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை அனுதாபப் பிரேரணை எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## கல்விச் சேவையாளர்கள்...

சுயாதீனப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கும் செயற்பாடுகள் பல்வேறு அழுத்தங்களால் மந்தகதியில் இடம்பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆசிரிய கல்வியாளர் சேவை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்குமாறு கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும், நிறைவேற்றுத்தரச் சேவை எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆசிரிய கல்வியாளர் சேவைக்கான வரப்பிரசாதங்கள் வெறும் வாய்ப்பேச்சளவிலேயே இடம்பெறுவதற்கும் அச்சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. அத்துடன் ஏனைய நிறைவேற்றுத்தரச் சேவை உத்தியோகத்தர்கள் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை கல்வியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் குறிப்பாக தரம் மூன்றில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் பன்னிரண்டு ஆண்டுகளில் தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு வழிவகுக்குமாறு கோரியும் ஒருநாள் சுகயீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக செயலாளர் தம்மிக தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளில் இருந்து தாம் விலகியிருக்கப்போவதாகவும் இவை குறித்து கல்வியமைச்சு செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் தம்மிக குறிப்பிட்டுள்ளார்.

## கடவுச்சீட்டு...

இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடவுச்சீட்டு வழங்குவதில் உள்ள பிரச்சினைக்கு தீர்வுகாண நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். கடவுச்சீட்டைப் பெற முன்அனுமதிக்கு பணம் பெறப்பட்டதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அவ்வாறு பணம் பெற்றுக்கொண்ட 16 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரியொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கடவுச்சீட்டுக்கு புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளைப் பெறுவதற்கு 50 புதிய நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. அவை பிரதேச செயலகங்களில் இயங்கும். அவ்வாறான செயன்முறை உருவாக்கப்பட்டதன் பின்னர் எவரும் கொழும்புக்கு வர வேண்டிய அவசியம் கிடையாது. விண்ணப்பத்தைத் தரவிறக்கம் செய்து பிராந்திய அலுவலகங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதன் பின்னர் மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டை உங்கள் வீடுகளிலேயே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஐந்து புதிய நிலையங்கள் திறக்கப்படவுள்ளன என்றார்.



# நுகர்வோருக்கு மரண அடி விடுக்கும் அரசாங்கத்தின் முயற்சியை முறியடிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



நுகர்வோரின் நலனுக்காக முன்நின்று செயற்பட்ட இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் சுயாதீன ஆணைக்குழுவில் செல்வாக்கு செலுத்துவதற்கு அரசாங்கத்துக்கு இடமளிக்க முடியாது எனவும் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் இந்த பிரேரணையை தோற்கடிப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறையினர் மற்றும் தொழில் முயற்சியாண்மையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று (22) பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பொது விவகாரங்களில் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்த எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியத்தின் பிரதிநிதிகளை சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. பெரும் வாழ்க்கைச் செலவால் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோருக்கு ஆதரவாக முன்நின்ற தலைவரை பதவி நீக்கம் செய்வது மக்களுக்கு விடுக்கும் மரண அடியாகும்.

மின்சார சபையின் நிர்வாக சீர்கேடு,ஊழல் மற்றும் மோசடியால் ஏற்படும் நஷ்டத்தை போக்க நுகர்வோர் மீது சுமத்தும் விலையேற்றத்தை சுட்டிக்காட்டியமையே ஜனக ரத்நாயக்கவுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு பிரதான காரணமாகும். இத்தருணத்தில் தேவைப்படும் ஒருவரைப் பாதுகாப்பதை விட,நுகர்வோர் சார்பாக அவர் எடுத்துக்கொண்ட கொள்கை நிலைப்பாடும் போராட்டமுமே வெற்றிபெற வேண்டும் .

சீர்திருத்தங்களுக்கு அவகாசம் இருப்பினும் தூரநோக்கற்ற விதமாக இவ்வாறு மின் கட்டண அதிகரிப்பை ஏற்படுத்தாது யதார்த்தபூர்வமாக விஞ்ஞானபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டு மக்களின் பக்கம் இருந்தும் நுகர்வோரின் பக்கமிருந்தும் தாம் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

# சமுர்த்தி உதவித் திட்டத்தில் மலையக மக்களின் பெயர் நீக்கப்படுவதாக போலிப் பிரசாரம் முன்னெடுப்பு

## குழப்பத்தை உருவாக்க எதிரணியினர் முயற்சிப்பதாக அமைச்சர் ஜீவன் குற்றச்சாட்டு



சமுர்த்தி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு உதவித் திட்டங்களில் இருந்து மலையக பெருந்தோட்ட மக்களின் பெயர்கள் நீக்கப்படுவதாக போலிப் பிரசாரத்தை முன்னெடுத்து, மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இதில் உண்மை கிடையாது. இம்முறை உரிய வகையிலேயே பதிவுகள் இடம்பெற்றுள்ளன. தகுதியான அனைவருக்கும் உதவித் திட்டங்கள் கிடைக்கும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நேற்று (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு நிதி உதவிகளின் போது மலையக சமூகம் ஓரங்கட்டப்படுகின்றது, அவர்களின் பெயர்கள் நீக்கப்படுகின்றன என்ற போலிப் பிரசாரத்தை எதிரணிகள் சில முன்னெடுத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

முன்னர் இந்த குறைபாடு இருந்திருக்கலாம். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை உள்ளது, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன கிடைக்கின்றன எனக்கூறி கிராம சேவை அதிகாரிகளால் அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கலாம். அப்போதும் நாம் தற்காலிக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தோம்.

இம்முறை அதிகாரிகள் நேரில் சென்று தகவல்களைத் திரட்டினர். எனவே எவருக்கும் பாகுபாடுகாட்டப்படமாட்டாது. தகுதியான அனைவருக்கும் உதவிக் கொடுப்பனவு நிச்சயம் கிடைக்கும். இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் நாம் பேச்சு நடத்தினோம். பாராளுமன்ற உரையின்போது பெருந்தோட்ட மக்கள் பற்றி அவர் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மலையக தமிழர்கள் உள்ளனர். அவர்களுள் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பேர்வரை பெருந்தோட்டங்களில் தொழில் புரிகின்றனர். இவர்களுள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களை முறையாக அடையாளம் காண வேண்டும். மாறாக முழுச் சமூகத்தையும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சமூகமாக அடையாளப்படுத்த முற்படுவது அந்த சமூகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும். ஆகவே, முறையான வகையிலேயே பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேரில், 85 ஆயிரம் பேர் வரை பெருந்தோட்டப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இது 52 வீதமாகும். பட்டியலில் குறைபாடுகள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பணியிலும் ஈடுபடுகின்றோம். எனவே, மக்கள் மத்தியில் வதந்திகளை பரப்பி, குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம்.

டிசம்பர் மாதமாகும்போது பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வந்துவிடும். நாடு வழமைக்குத் திரும்பிவருகின்றது. இதனால்தான் மக்கள் மத்தியில் எதிரணிகள் வதந்தி பரப்பி வருகின்றன.

அதேவேளை, பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்கவை பதவி நீக்குவது தொடர்பான பிரேரணைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாக வாக்களிக்கும். இது விடயத்தில் நாம் அமைச்சர் பக்கமே நிற்போம். நாட்டில் தற்போது தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது. மின் கட்டணத்தை குறைப்பது பற்றியும் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது.

இந்நிலையில் சுயாதீன ஆணைக்குழுவொன்றின் தலைவர் அரசின் திட்டங்களை குழப்பும் வகையில் செயற்படக்கூடாது. அவர் அரசியலை இலக்கு வைத்து செயற்படுகின்றார். எதிரணிகளும் அவரை பகடையாக பயன்படுத்தி அரசியல் நடத்தி வருகின்றன. இப்படியானவரை பதவி நீக்கும் யோசனையை நாம் ஆதரிப்போம் என்றார்.

# வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ் நேற்று கடமையேற்பு





வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண அவைத் தலைவர் சி.வி.சிவஞானம், வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், இராணுவத்தினர், மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடமாகாண திணைக்கள, அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் ஆளுநர் செயலக உத்தியோகத்தர்கள், மதத்தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், மாவட்ட அரசாங்க அதிபராகவும் சுங்கத் திணைக்களப் பணிப்பாளராகவும் வடமாகாண ஆளுநராகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்ற தீர்ப்பை கேள்விக்குட்படுத்தல் தொடர்பான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நீதிமன்ற தீர்ப்பை கேள்விக் குட்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாக மக்கள் பிரதிநிதிகள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று (22) திங்கட் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஜூன் முதலாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தாவளை-இயற்றாலை ஊரெல்லை வீதியை தனியார் ஒருவர் அபகரித்து வேலியிட்டுள்ளதாகக் தெரிவித்து கிராம மக்கள் பிரதேச சபை முன்பாக அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பிரதேச சபை தமது ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி வீதியை பொலிஸாரோடு இணைந்து மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தனர்.

இந்நிலையில் வழக்காளி நகர்த்தல் பத்திரம் ஊடாக 18.01.2021 திகதி வழங்கப் பட்ட சாவகச்சேரி நீதிமன்ற தீர்ப்பை வலிதற்றதாக்கியதாக காரணம் காட்டி போராட்டத்தில் மக்களோடு இணைந்து செயற்பட்ட முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களான கிஷோர், மயூரன் மற்றும் திலகராணி ஆகியோரை நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கிணங்க குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/


## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

### உத்தேசிக்கப்பட்டுள்ள 2வது மின்சாரக் கட்டண திருத்தம் 2023 பொது ஆலோசனை கேட்டல்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2023 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவை இலங்கை மின்சார சபை மீளாய்வு செய்து வருகிறது, அது தொடர்பான ஆலோசனை அறிக்கை 2023 ஜூன் மாதம் முதலாம் திகதி அன்று வெளியிடப்படும். www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று கலந்தாய்வுத் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**முன்மொழியப்பட்டுள்ள மின் கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் 2023 ஜூன் மாதம் 20 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான வாய்மூலக் கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு 2023 ஜூன் மாதம் 20 ஆம் அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் பங்கேற்பதற்காக பதிவு செய்ய 071 862 2800 ஐ அழைக்கவும்.**

அங்கீகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணங்கள் 2023 ஜூன மாதம் 30 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டு 2023 ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த பொது ஆலோசனை கேட்டல் நடத்தப்படுகிறது.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

**"உத்தேசிக்கப்பட்டுள்ள 2வது மின்சாரக் கட்டண திருத்தம் 2023 பொது ஆலோகனை கேட்டல்"**

தலைவர்,
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

**பெக்ஸ்**: (011) 2392641
**மின்னஞ்சல்** : consultation@pucsl.gov.lk
**இணையதளம்** : www.pucsl.gov.lk
முகநூல் : www.facebook.com/pucsl

**மேலதிக தகவல்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கும் திரு. காஞ்சன சிறிவர்தன அவர்களை (011) 2392607/8 தொடர்பு கொள்ளவும்.**

**ஜனக ரத்நாயக்க**

தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

23.05.2023

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மே 23ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


## சம்பந்தன் கூறும் கருத்தை அரசு சிந்தைக்கு எடுத்தல் வேண்டும்!

உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ள விடயத்தைக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மே 18ஐ தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையைக் கனேடியப் பாராளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது.

இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது என அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கண்டனம் வெளியிட்டதுடன், அதனை நிராகரித்துமிருந்தார்.

*''இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. அது இந்நாட்டில் வாழும் சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களுக்கும் தெரியும்.*

*இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான கனேடியப் பிரதமரின் அறிக்கை சரியானது. இலங்கையில் போர் உக்கிரமடைந்த காலத்திலும், போர் முடிவுக்கு வந்த காலத்திலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.*

*அதை மறுக்கும் தற்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அப்போது அமைச்சராக இருக்கவில்லை.*

*உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அலி சப்ரியின் பதிலை நாம் உதாசீனம் செய்கின்றோம். அது பெறுமதியற்ற நிராகரிப்பு. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. பல்வேறு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*ஆனால், இதுவரை இலங்கை அரசாங்கம் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையைச் செய்யவில்லை.வெளிநாட்டு விசாரணைக்கும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை. உள்நாட்டு விசாரணையையும் நடத்தவில்லை. என்ன காரணத்துக்காக உள்நாட்டு விசாரணை இல்லை? உள்நாட்டில் பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணையை இலங்கை அரசாங்கம் இதுவரை நடத்தவேயில்லை.*

*அதிலிருந்து தாங்கள் செய்தது குற்றம் விசாரணை நடத்தினால் உண்மை வெளிப்படும் என்றும் இலங்கை அரசு அஞ்சுகின்றது என்பது நன்றாகப் புரிகின்றது. அலி சப்ரியின் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம். இலங்கையில் இனப்படுகொலை நடந்தது உண்மை. அது தொடர்பான கனேடியப் பிரதமரின் அறிக்கையை வரவேற்கின்றோம். இனியாவது, இப்போதாவது ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியுமா என்று இலங்கை அரசிடம் கேட்கின்றோம். இலங்கை அரசாங்கத்திற்கு துணிவிருந்தால் அதைச் செய்யட்டும்''* என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் கருத்துகள் தமிழரின் எண்ணக்கிடக்கைகளையே பிரதிபலிக்கின்றன. உள்நாட்டுப்போரில் எந்தக் குற்றங்களையும் செய்யவில்லையென இலங்கை அரசு கூறுமாயின், விசாரணைகளுக்கு ஏன் அச்சப்படவேண்டும் என்று சம்பந்தன் கேள்வியெழுப்புவதிலும் நியாயம் இருக்கிறது.

கனடா என்பது சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்ட நாடு. மனித உரிமைகளையும், அனைத்து மக்களின் அபிலாஷைகளையும் புரிந்துகொண்ட நாடு. எல்லாவற்றுக்கும் மேலாக கணிசமான ஈழத்தமிழர்களுக்கு வாழ்வளித்த நாடு. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைகொடுத்த தேசமது. அப்படியான நாட்டின் பிரதமர் தெரிவித்த கருத்தை மறுத்துப்பேசுவதும், அந்நாட்டுத் தூதுவரை அழைத்து கேள்வியெழுப்புவதும் சிறுபிள்ளைத்தனமான செயற்பாடு. அரசாங்கம் சர்வதேச சமூகத்தைத் திருத்த முன்னர் தன்னை திருத்திக்கொள்ள வேண்டும். சம்பந்தனின் கருத்துகளிலுள்ள நியாயத்தை, அர்த்தத்தை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

# மக்களாட்சி குறித்த விவாதம் தேவை..!

மக்களாட்சி என்பது ஒரு மந்திரச்சொல். உலக மக்கள் அனைவரும் விரும்புவது மக்களாட்சி முறையையே. எந்தப் புரிதலுடன் அவர்கள் மக்களாட்சி வேண்டும் என்று கேட்கின்றார்கள் என்று சிந்தித்தால் தேர்தல் மூலம் நாம் ஓர் ஆட்சியை உருவாக்கலாம், அந்த ஆட்சி நமக்குப் பிடிக்கவில்லை என்றால் மீண்டும் தேர்தல் வரும்போது அந்த ஆட்சியை அகற்றிவிடலாம் என்ற புரிதலுடன்தான்.

தேர்தல்தான் மக்களாட்சியா என்றால் இல்லை. தேர்தலைத் தாண்டி பல அடிப்படை அம்சங்கள் மக்களாட்சிக்கு உள்ளன. அந்த அடிப்படை அம்சங்கள் அனைத்தும் மக்களுக்குத் தெரியும் என்று உறுதியாகக் கூற இயலாது. எந்த சமூகத்தில் மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள் பற்றி புரிதல் இருக்கிறதோ அந்த சமூகத்தில் மக்களாட்சி ஆழமாக வேர் விட்டிருக்கிறது என்று பொருள். மக்களாட்சி என்பது ஒற்றைப் புள்ளியில் நின்று விடுவதல்ல. அது தொடர்ந்து வியாபித்தவாறே இருக்கிறது.

நாட்டின் சுதந்திரத்திற்கு எப்படி வரலாறு உண்டோ, அதேபோல் மக்களாட்சிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. சுதந்திரத்திற்கான வரலாறு என்பது நாடு சுதந்திரம் அடைந்தவுடன் நிறைவடைந்து விடுகிறது. ஆனால், குறியீடுகளை வைத்து தேர்தல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வது, சுயமரியாதைக் குறியீடுகளை வைத்து மக்களாட்சியானது, மக்களின் சுய மரியாதை வென்றெடுக்க உதவியதா என அளந்து பார்ப்பது, இவையெல்லாம் நடைபெறுகின்றன.

குடிமக்கள் பங்கேற்பு குறியீடுகளை வைத்து மக்களாட்சி பங்கேற்பு குடிமக்களிடம் எந்த அளவில் நடைபெறுகிறது என மதிப்பீடு செய்வது, அதேபோல் மனித உரிமைகள் குறியீடுகளை வைத்து மனித உரிமை காத்தல் எப்படி நடைபெறுகிறது என மதிப்பீடு செய்வது, குடிமக்கள் குறியீடுகளை உருவாக்கி, மக்களாட்சியில் குடிமக்கள் செயற்பாட்டை மதிப்பீடு செய்வது என மக்களாட்சியின் அத்தனை கூறுகளையும் மதிப்பிட்டு ஆய்வு அறிக்கைகள் தயாரித்து வெளியிடப்படுகின்றன.

இந்த ஆய்வுகளையும், அறிக்கைகளையும் மக்களாட்சி நடைபெறுகின்ற நாடுகளில் பொதுக் கருத்தாளர்கள் அறிவுஜீவிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள் எந்த அளவுக்கு மக்களிடம் எடுத்துச் சென்று மக்களைத் தயார் செய்கின்றார்களோ அந்த அளவுக்கு மக்களாட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை உருவாகும். இந்த செயற்பாடுகளுக்கு சட்டப்பேரவைக்குச் செல்லுகின்றனர்.

அவர்கள் தங்கள் துறையில் வல்லுனராக இருக்கலா.ம் ஆனால், சட்டப்பேரவைச் செயற்பாடுகளில் வல்லுநர்கள் கிடையாது. சட்டப்பேரவை செயற்பாடு நிபுணத்துவம் வாய்ந்தது. எனவே, நிபுணத்துவத்துடன் சட்டப்பேரவையில் செயற்பட பயிற்சியளிக்க பெருமளவு நிதியை செலவு செய்கிறார்கள். எந்த அளவுக்கு பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்களோ, அந்த அளவுக்கு சட்டப்பேரவை, பாராளுமன்ற ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

எனவே, நிபுணத்துவம் வாய்ந்த அறிவுஜீவிகள் அந்நாடுகளின் சட்டப்பேரவைக்குக் கிடைப்பார்கள். அவர்கள்தான் ஊடக விவாதங்களில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள். நம் நாட்டில் அப்படிப்பட்ட சிந்தனை நம் அரசாங்கத்திற்கோ, அரசியல் கட்சிகளுக்கோ இல்லை. அதனால், தேர்தலுக்கு மேல் மக்களாட்சியை நம் கட்சிகளாலும் தலைவர்களாலும் அறிவுஜீவிகளாலும் பொதுக் கருத்தாளர்களாலும் எண்ணிப்பார்க்க இயலவில்லை.

அப்படி இருக்கும்போது மக்கள் மட்டும் எப்படி மக்களாட்சி சிந்தனையோடு மக்களாட்சியின் வரலாறு ஒரு தொடர்கதை. காரணம் மக்களாட்சி வளரும் தன்மை கொண்டது.

மக்களாட்சியின் கூறுகள் குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவாக்கப்பட்டவை அல்ல. மக்கள் போராடிப் போராடி அதன் கூறுகளை வளர்த்தெடுத்துள்ளனர். அது சுதந்திரத்தில் ஆரம்பித்திருக்கலாம். ஆனால், அது இன்று பல்வேறு விழுமியங்களைக் கடந்து மற்றவர் கூறும் கருத்துகளைக் கேட்பது, அடுத்தவரின் கண்ணியத்தைப் பாதுகாப்பது என்ற நிலைக்கு வந்துள்ளது. இன்று மக்களாட்சியை வலுப்படுத்தத் தேவைப்படுவது சிந்தனை மாற்றமும் நடத்தை மாற்றமும்தான்.

மக்களாட்சி முறை என்பது நாட்டின் அரசியல் சாசன அமைப்புபோல செயற்படுவது அல்ல. அது ஓர் ஆட்சியியல் முறை. அந்தந்த சமூகம் கொண்டுள்ள மக்களாட்சிக்கான புரிதலுக்கு ஏற்ப ஆட்சி நடைபெறும். மக்களாட்சியின் மேல் எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறதோ அந்த அளவுக்கு மக்களாட்சியில் புதுமைகள் உருவாகிக்கொண்டேயிருக்கும்.

சமூகம் என்பது சமநிலையில் இயங்குவது கிடையாது. அது பல்வேறு ஏற்றத் தாழ்வுகளுடன்தான் இயங்கி வருகிறது. எனவே, மக்களாட்சி என்ற ஆட்சி முறை எவ்வாறு வடிவமைக்கப்படுகிறதோ அதற்கு ஏற்றாற்போல்தான் அது செயற்படும். அந்த முறை எல்லாத் தரப்பு மக்களுக்கும் ஏற்றத்தைப் பெற்றுத் தருகிறதா என்பதுதான் கேள்வி.

இதற்காகத்தான் மக்களாட்சிக்குள் ஒரு போராட்டம் நடந்து வருகிறது. அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு, கலாசாரம், சமயம், குடும்பம் என அனைத்துப் பிரிவுகளிலும் இந்தக் கூறுகளை ஒரு செயற்பாடாக வளர்த்தெடுத்துள்ளது மானுடம். இந்நிகழ்வுகள் எல்லா நேரத்திலும் வெற்றியைத் தந்துள்ளன என்று கூற முடியாது. பல நேரங்களில் அது தோல்வியையும் தழுவியுள்ளது.

மக்களாட்சியின் செயற்பாடுகள் தொடர்ந்து ஆய்வுசெய்யப்பட்டு மக்களின் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. மக்களாட்சிக்கான குறியீடுகளை வைத்து அதனை அளப்பது, ஆளுகையில் அதன் குறியீடுகளை வைத்து அளப்பது, சமூக மக்களாட்சிக் குறியீடுகளை வைத்து சமூகத்தில் மக்களாட்சி இருக்கிறதா என்று மதிப்பீடு செய்வது, மக்களாட்சி நிறுவனக் குறியீடுகளை வைத்து நிறுவனச் செயற்பாடுகளை அளப்பது, தேர்தல் மிகப்பெரிய கட்டமைப்பும், பணபலமும் தேவை.

பல நாடுகளில் அந்தந்த நாட்டுக்குத் தேவையான மக்களாட்சி ஆய்வுகளை செய்திட அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். அவை தொடர்ந்து ஆய்வு செய்கின்றன. மக்களாட்சியில் காலத்திற்கு ஏற்ப சீர்திருத்தங்களை ஆளுகையிலும், நிர்வாகத்திலும், கொள்கைகளிலும், அரசியலிலும் கொண்டு வருகின்றன. எனவே, அவை மக்களாட்சிச் செயற்பாடுகளில் முன்னணி நாடாக விளங்குகின்றன.

மக்களாட்சி மேம்பட தொடர் ஆய்வும், தொடர் பயிற்சியும் இன்றியமையாதவை. மக்களாட்சியை மக்கள் சிந்தனையிலும், நடத்தையிலும் ஒரு கலாசாரமாக வைத்திருக்கும் நாடுகளில் விவாதங்கள் தண்ணீருக்கும் சாலை வசதிக்கும், மின்சாரத்திற்கும் இருக்காது. சிறப்பான ஆளுகைக்கும், நிர்வாகத்திற்குமானதாகவே இருக்கும். அரசின் கொள்கைகள், திட்டங்கள் போன்ற அனைத்துக்கும் குறியீடுகளை வைத்து அந்த நாட்டில் மக்களாட்சிச் செயற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றது என்பதை படம்பிடித்துக் காண்பித்து விடுவார்கள்.

உயராய்வு நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் மேற்கத்திய நாடுகளில் அந்தப் பணியை முறையாகச் செய்து வருகின்றன. அதற்கான நிதியைப் பல்கலைக்கழகங்களுக்கும் உயராய்வு மையங்களுக்கும் எந்தப் பாகுபாடும் இன்றி அரசுகள் தந்துவிடுகின்றன. அவர்கள் ஆய்வு செய்து தருகின்ற அறிக்கைகளை ஊடகங்கள் விவாதங்களாக மாற்றி, மக்களிடம் எடுத்துச் செல்கின்றன. அப்படிச் செய்யும்போது ஊடகங்கள் பொதுக் கருத்தாளர்களையும், துறைசார்ந்த வல்லுநர்களையும் அழைப்பார்களே தவிர, நம் ஊரைப்போல் அரசியல் கட்சிக்காரர்களை வைத்து விவாதம் நடத்துவது கிடையாது.

மேலைநாடுகளில் உயர்கல்வி பயின்றவர்கள், உயர் பதவிகளில் உள்ளவர்கள் பணியிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு வந்து கட்சிகளின் சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு, எப்படி நிபுணத்துவத்துடன் சட்டப்பேரவையில் செயல்படுவது என்று பயிற்சி தருகிறார்கள் வல்லுநர்கள். அங்கு மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், பேராசிரியர்கள் போன்ற படித்தவர்கள்தான் இருக்கமுடியும்? தேர்தல்தான் மக்களாட்சியின் அறிமுகச் செயற்பாடு. அந்தச் செயலிலேயே மக்களாட்சி தேங்கி நிற்பதைப் பார்க்கிறோம். தேர்தல் நடத்துவதில் அந்தக் குறியீடுகளை வைத்து ஆய்வு செய்தபோது, அந்தக் குறியீட்டிலும் நாம் அதிக மதிப்பெண் பெற இயலாமல் 108ஆவது இடத்தில்தான் இருக்கிறோம். காரணம் தேர்தலையே தவறுகளோடும், விதிகள் மீறியும் நடத்துவதுதான்.

மக்களாட்சி என்பது மக்கள் நம்பிக்கையைப் பெறுவது என்பது மாறி, எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றி சுகபோக வாழ்க்கை வாழ்க்கை வாழ்வது என்று மடைமாற்றம் செய்யப்பட்டுவிட்டது.

இதன் விளைவால், தற்போது ஊழல் ஒழிப்புதான் தேர்தலில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. ஒரு காலத்தில் வறுமை ஒழிப்பு, சமூக மேம்பாடு, மக்கள் நலம் பேணுதல் இவைகளெல்லாம் பொதுத்தளத்தில் விவாதங்களாக இருந்தன. ஆனால், இன்று ஊழல் மட்டுமே பிரதான இடத்தைப் பெற்றுவிட்டது.

மக்களாட்சியைக் காப்பாற்ற ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற சூழலுக்கு அரசியல் தற்போது கட்டமைக்கப்பட்டு விட்டது. அது மட்டுமல்ல, பொதுவெளியில் ஊழல் விவாதிக்கப்படும்போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த கட்சிகள், தலைவர்கள் மேல் மக்கள் மத்தியில் ஒரு வெறுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை சந்தை கொண்டு வந்துவிடும். பெற்ற பொருளாதார வளர்ச்சியை முறையாக பங்கிடுவது அரசாங்கம். அங்கு ஊழல் மலிந்ததன் விளைவு, அரசியல் ஊழல்மயமாகி, பணம் வைத்திருப்பவர் மட்டுமே அரசியலுக்கு வரமுடியும் - தேர்தலுக்கு நிற்க முடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. சோக்ரடீஸ் கூறியதுபோல மக்களாட்சியானது செல்வந்தர் ஆட்சியாக மாற்றப்பட்டு விட்டது.

ஊழல் ஒழிப்பு என்பது இன்று மக்களாட்சியைக் காப்பாற்றும் கருவியாக மாறிவிட்டது. எனவே, எது மக்களாட்சி என்பதையும், ஏன் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதையும் விவாதப் பொருளாக்கி மக்களிடம் எடுத்துச் செல்லவேண்டும். இதுதான் இன்றைய இன்றியமையாத தேவை.

**பேராசிரியர்**
**க.பழனித்துரை**

*(நன்றி - தினமணி)*

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1633 – மட்டக்களப்பு நகரை போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் கைப்பற்றினர்.
- 1958 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செயற்கைக்கோளான எக்ஸ்புளோரர்-1 பூமியுடனான தனது தொடர்பை இழந்தது.
- 2008 – கிளிநொச்சி மாவட்டம், முறிகண்டி அக்கராயன் வீதியில் இலங்கைப் படையினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 2014 – கொங்கோ ஜனநாயகக் குடியரசின் முன்னாள் ஆயுதக்குழுத் தலைவரான செருமைன் கட்டாங்கா புரிந்த போர்க்குற்றங்களுக்காக, அவருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 12 ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்தது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (22.05.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 198.2578 | 210.0822 |
| கனேடியன் டொலர் | 220.6324 | 233.6454 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.9775 | 45.1639 |
| யூரோ | 323.2367 | 340.7976 |
| ஜப்பான் யென் | 2.1714 | 2.2865 |
| சிங்கப்பூர் டொலர் | 222.0698 | 234.4694 |
| ஸ்ரேலிங் பவுண் | 372.9076 | 391.8096 |
| சுவிஸ் பிராங்க் | 331.6379 | 351.4907 |
| ஐ.அ. டொலர் | 299.7149 | 313.8244 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 814.4773 |
| குவைட் | குவைட் தினார் | 999.6364 |
| ஓமான் | ஓமான் றியால் | 797.5645 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.3564 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.8875 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.6202 |

# மனைவியின் தலையை மொட்டையடிக்க வற்புறுத்தல்: கணவனுக்கு பிரித்தானியாவில் சிறைத்தண்டனை

தனது மனைவியின் தலைமுடியை மொட்டையடிக்க வற்புறுத்தியதுடன் அவரை அடித்து சித்திரவதை செய்த இலங்கையைச் சேர்ந்த கணவனுக்கு பிரித்தானிய மான்செஸ்டர் கிரவுன் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளதுடன் 5 வருடங்களுக்கு மனைவியை சந்திக்கவும் தடைவிதித்துள்ளது.

அவர் தனது மனைவியின் 17 வருட திருமண வாழ்க்கையை "துன்பமாக" மாற்றினார் எனவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

அவரது மனைவியின் தொலைபேசியை பரிசோதிப்பது, பெல்ட்டால் அடிப்பது, தலையை மொட்டையடிக்க வற்புறுத்துவது, வயிற்றில் உதைப்பது, பொருட்களை எறிவது, வாய்மொழியாக அவமானப்படுத்துவது போன்றன துஷ்பிரயோகச் செயல்களில் அடங்கும் என்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த இலங்கையருக்கு பிரித்தானியாவில் வேலை வாய்ப்பு கிடையாது. அவரது மனைவியின் சம்பாத்தியத்தையே போதைப்பாவனைக்கு பயன்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், அவர்கள் குடும்பம் சகிதம் இலங்கைக்கு வந்திருந்தபோது அவர் சில பெண்களுடன் பாலியல் உறவிலும் ஈடுபட்டார். தான் பணக்காரனாகவோ அழகானவனாகவோ இல்லாததால் அவ்வாறு பல பெண்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதாக மனைவியிடம் கூறியுள்ளார்.

தனது மனைவியை பிரித்தானிய குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதைத் தடுத்ததுடன் சில நண்பர்களைத் தொடர்புகொள்வதையும் தடைசெய்தார். கணவரின் நடத்தை குறித்து அவரது மனைவி நண்பரிடம் பேசியதையடுத்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் விசாரணையின்போது, மனைவியை நன்றாக நடத்தியதாகவும் சுதந்திரம் கொடுத்ததாகவும் கூறினார். அவர் தனது மனைவி தனது தலைமுடியை தானாக முன்வந்து மொட்டையடித்ததாகவும் கூறினார்.

இந்தத் தம்பதியினர் இலங்கையில் திருமணம் செய்த பின்னரே பிரித்தானியாவுக்கு வந்தனர்.

தனது மனைவிக்கு மற்றொரு உறவு இருப்பதை கணவர் கண்டறிந்த பின்னரே குரூரமாக மாறியுள்ளார்.

மனைவியின் விவகாரத்தைப் பற்றி அவர் கண்டுபிடித்தார், அவர் தனது அறிக்கையில் அதைப்பற்றி மிகவும் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அந்தச் சூழலில்தான் துஷ்பிரயோகம் அதிகரித்தது என அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இருப்பினும், கணவனின் தவறான நடத்தையை உறுதிப்படுத்த போதுமான ஆதாரங்கள் இருப்பதாக நீதிபதி உணர்ந்தார். "பல வருடங்களாக உங்கள் மனைவியிடம் நீங்கள் பயமுறுத்தும் நடத்தையே அவருடைய வாழ்க்கையை துயரமாக்கியது. அது அவரது உளவியல் நல்வாழ்வில் கணிசமான எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் கிடையாது'' என்றார்.

அல்ட்ரிஞ்சம், க்ரோபி ரோட்டைச் சேர்ந்த கணவர், கட்டுப்படுத்தும் அல்லது வற்புறுத்தும் நடத்தையை வெளிப்படுத்தியதற்காக குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அவருக்கு 27 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் ஐந்து ஆண்டுகளுக்கு அவரது மனைவியுடன் தொடர்பு கொள்ளவும் நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டது.

## சிலாபம் களப்பை அழிவிலிருந்து பாதுகாக்க அமைச்சர் நடவடிக்கை

சிலாபம் களப்பு மற்றும் அதனை அண்டிய பகுதி மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

அமைச்சருக்கும் சிலாபம் மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (22) இடம்பெற்றது. இதன்போது மீன் பிடித் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச்சரிடம் தெளிவுபடுத்தப்பட்டது.

அதாவது களப்பு பகுதியில் மணல் நிறைந்து காணப்படுதல், நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுதல், இறால் பண்ணைகளில் உள்ள நீர் மீண்டும் களப்பில் கலப்பதால் ஏற்படும் சூழல் பாதிப்புகள்,இவற்றால் குறித்த களப்புப் பகுதியில் மீன் மற்றும் இறால் இனப்பெருக்கம் ஏற்படுவதில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன் சிலாபம் பொது வைத்தியசாலை கழிவுப்பொருட்கள்,நகர சபையின் குப்பைகூளங்கள் களப்பில் கலக்கப்படுவதுடன் நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படவில்லை எனவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது அமைச்சர் நாரா மற்றும் நெக்டா நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு நாளைய தினமே உடனடியாக ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு தெரிவித்ததுடன் சிலாபம் நகரசபை செயலாளர், பிரதேச சபை செயலாளர், வடமேல் மாகாண மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள், கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுடன் எதிர்வரும் சனிக்கிழமை அப்பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் அமைச்சின் செயலாளர்கள், நாரா, நெக்டா மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வாகன விபத்து இருவர் உயிரிழப்பு

கொஸ்கம வீதி அளுத் அம்பலம் பகுதியில் முச்சக்கர வண்டியும் கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (21) மாலை இடம்பெற்றது. இச்சம்பவத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்ததாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த மற்றுமொருவர் விபத்தில் படுகாயமடைந்த நிலையில், அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


## வாகன விற்பனை சந்தை - கொட்டாவை

| வாகன இலக்கம் | தயாரிப்பு | மாதிரி | வாகன இலக்கம் | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|---|---|---|
| NC BGI-00XX | YAMAHA | RAY ZR | NW BHV-75XX | TVS | NTORQ |
| WP BII-00XX | HONDA | DIO | WP BIE-76XX | YAMAHA | FZ VERSION 03 |
| CP BIF-00XX | HONDA | DIO | WP BFM-76XX | YAMAHA | RAY ZR |
| WP BIJ-01XX | HONDA | DIO | WP BIC-76XX | HONDA | DIO |
| WP BHJ-01XX | YAMAHA | RAY ZR | WP BCA-76XX | TVS | WEGO |
| WP BHA-01XX | HONDA | DIO | CP BCN-77XX | TVS | WEGO |
| WP BFK-02XX | HONDA | DIO SCV 110 | WP BIG-77XX | HONDA | DIO |
| SG BIG-03XX | HONDA | DIO | SP BEX-77XX | BAJAJ | PULSAR 150 |
| SG BIZ-03XX | TVS | NTORQ | WP BBQ-77XX | BAJAJ | PULSAR 135 |
| NW BFK-04XX | HONDA | DIO | CP BDV-78XX | HONDA | DIO |
| NW BEU-04XX | YAMAHA | RAY ZR | WP BDQ-80XX | HONDA | DIO |
| WP BEC-05XX | HONDA | DIO | WP BIN-80XX | YAMAHA | RAY ZR |
| WP BIR-07XX | TVS | NTORQ | SP BGF-84XX | HONDA | DIO |
| WP BGX-10XX | HERO | MAESTRO | WP BGZ-84XX | YAMAHA | RAY ZR |
| CP BDH-11XX | HERO | DASH | CP BGW-85XX | YAMAHA | FZ VERSION 2 |
| NP BFV-12XX | YAMAHA | RAY ZR | SP BGB-86XX | HONDA | DIO |
| UP BAO-12XX | BAJAJ | PULSAR 135 | CP BFY-86XX | YAMAHA | FZ |
| SG BIE-12XX | YAMAHA | RAY ZR | WPBHM-88XX | TVS | STRYKER |
| WP BHN-13XX | SUZUKI | BURGMAN | NC BEL-88XX | YAMAHA | RAY ZR |
| WP BEK-13XX | BAJAJ | PLATINA | WP BEB-90XX | YAMAHA | FZ |
| WP BDT-14XX | BAJAJ | PULSAR 150 | WP BHU-90XX | HONDA | DIO |
| NP BIS-15XX | YAMAHA | RAY ZR | SPBED-93XX | HONDA | DIO |
| WP BIU-16XX | HONDA | DIO | SG BCT-97XX | HONDA | DIO |
| EP BFN-17XX | HERO | MAETRO EDGE | WP BFJ-97XX | YAMAHA | RAY ZR |
| WP BGU-17XX | TVS | APACHE RTR | SP BHY-97XX | HONDA | DIO |
| WP BFY-17XX | BAJAJ | CT 100 | WP BEZ-97XX | HONDA | HORNET |
| CP BFT-18XX | HONDA | DIO | EP HK-02XX | BAJAJ | 4stroke |
| SP BIO-18XX | YAMAHA | RAY ZR | UP QQ-07XX | BAJAJ | AUTO AR4S |
| WP BEM-19XX | YAMAHA | RAY ZR | WPAAW-08XX | TVS | KING |
| SP BEQ-20XX | HONDA | DIO | UP AAX-09XX | BAJAJ | 4stroke |
| WP BDE-21XX | HONDA | DIO | SP QT-11XX | BAJAJ | 4stroke |
| WP BEW-24XX | HONDA | DIO | WP QE-18XX | BAJAJ | 4stroke |
| SP WX-25XX | BAJAJ | PULSAR 150 | CP QU-20XX | BAJAJ | 4stroke |
| WP BAW-29XX | BAJAJ | PULSAR 135 | SP GP-20XX | BAJAJ | 2stroke |
| WP BHV-31XX | YAMAHA | RAY ZR | WP HA-21XX | BAJAJ | 2stroke |
| WP BIM-31XX | HONDA | DIO | NC QX-26XX | BAJAJ | 4stroke |
| WP BGC-32XX | BAJAJ | CT 100 | CP QB-27XX | BAJAJ | 2stroke |
| UP BFJ-33XX | BAJAJ | PULSAR 150 | WP YE-30XX | BAJAJ | 4stroke |
| WP BHG-37XX | TVS | NTORQ | CP QQ-31XX | BAJAJ | 4stroke |
| WP BHD-40XX | HERO | MAESTRO EDGE | WPAAD-33XX | BAJAJ | RE 205 |
| WP BGM-42XX | YAMAHA | RAY ZR | SP QK-33XX | BAJAJ | 4stroke |
| WP BGW-44XX | TVS | WEGO | WP QM-37XX | BAJAJ | 4stroke |
| WP BDD-47XX | HERO | PLESURE | UP HC -37XX | BAJAJ | AUTO RE 2 STROKE |
| CP BEZ-49XX | YAMAHA | FZ | SG AAN-38XX | BAJAJ | 4stroke |
| SP BHL-49XX | YAMAHA | RAY ZR | SP QM-41XX | BAJAJ | 4stroke |
| WP BHD-49XX | TVS | NTORQ | WP QH-42XX | BAJAJ | 2stroke |
| SG BFF-51XX | YAMAHA | FZ VERSION 02 | UP HI-47XX | BAJAJ | AUTO RE 2 STROKE |
| WP BIJ-51XX | BAJAJ | PULSAR 200 | WP QS-51XX | BAJAJ | 4stroke |
| SG BEX-51XX | HONDA | DIO | WP YZ-53XX | BAJAJ | RE 205 |
| WP BFF-52XX | YAMAHA | RAY ZR | CP QQ-55XX | BAJAJ | 4stroke |
| WP ABK-53XX | TVS | KING | SP ABF-57XX | BAJAJ | 4stroke |
| UP BHQ-53XX | HONDA | DIO | CP ABL-60XX | PIAGIO | APE |
| NP BCM-55XX | BAJAJ | PULSAR | CP QM-61XX | BAJAJ | 4stroke |
| CP BET-55XX | BAJAJ | PULSAR 150 NS | UP ABE-66XX | BAJAJ | 4stroke |
| NCBFE-56XX | DTM | DZM 200 | SP QK-67XX | BAJAJ | 4stroke |
| WP BDL-56XX | BAJAJ | PULSAR | WP YA-67XX | BAJAJ | 4stroke |
| WP BGK-57XX | HONDA | DIO | SG QJ -71XX | BAJAJ | 4stroke |
| NC BCV-58XX | BAJAJ | PULSAR 150 | WP QL-73XX | BAJAJ | 4stroke |
| WP BHW-58XX | HONDA | DIO | SG QB-73XX | BAJAJ | 2stroke |
| WP BFY-59XX | HONDA | DIO SCV 110 | WP QI-75XX | BAJAJ | 4stroke |
| WP BGM-60XX | HONDA | DIO | WPYL-76XX | BAJAJ | 4stroke |
| UP BIZ-60XX | TVS | NTORQ | WPQG-76XX | BAJAJ | 2stroke |
| WP BIO-61XX | YAMAHA | RAY ZR | WPYW-77XX | BAJAJ | 4stroke |
| NC BEV-61XX | BAJAJ | PULSAR | CP QO-77XX | BAJAJ | 4stroke |
| WP BFI-62XX | HONDA | DIO | CP QL -78XX | BAJAJ | 4stroke |
| NC BGF-62XX | YAMAHA | RAY ZR | UP QO-86XX | BAJAJ | AUTO AR4S |
| NW BEB-64XX | BAJAJ | CT 100 | WP YU -95XX | BAJAJ | 4stroke |
| SP BHF-64XX | HONDA | GRAZIA | UP GV-96XX | BAJAJ | 2stroke |
| NW BFO-65XX | HONDA | DIO | WP QS-97XX | BAJAJ | 4stroke |
| CP BHF-65XX | HONDA | HORNET | CP QE-98XX | BAJAJ | 4stroke |
| WP BHD-66XX | YAMAHA | FZ VERSION 02 | WP ZB-17XX | JCB | 3CX |
| WP BAY-68XX | BAJAJ | PULSAR | WP KI-19XX | TATA | INDICA |
| WP BEZ-68XX | YAMAHA | RAY ZR | WP JC 41XX | NISSAN | MARCH |
| WP BHH-68XX | TVS | NTORQ | 51-68XX | NISSAN | CARAVAN |
| WP BBT-69XX | BAJAJ | PULSAR | WP PE-87XX | TOYOTA | K D H |
| SG BBD-70XX | BAJAJ | PLATINA | CP KO-87XX | TATA | NANO |
| WP BIP-71XX | HONDA | DIO | SP CBI - 90XX | JAGUAR | XF S |
| WP BHG-72XX | YAMAHA | RAY ZR | WP GZ-93XX | SUBARU | FREEZER |
| UP BBD-73XX | BAJAJ | BAJAJ PULSAR -150cc | | | |

இல 17/1, பிங்ஹேறன சந்தி, ஹொரணை வீதி, கொட்டாவை. வாகனசாலையில் மே 25, 26 (காலை 8.30 முதல் மாலை 4.30 வரை) பார்வையிடலாம்.

முன்னறிவித்தலின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்கு உரிமையுண்டு.

ஏலத்திகதி 27.05.2023 நேரம் காலை 9.30

*நிபந்தனைகளுக்குட்பட்டது

உபுல் - 0719919986 விஷ்வ - 0774787096

Hotline - 071 7807788 Whatsapp - 071 0356125

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ඒ එන් අල්ගෙවත්ත ඕක්ෂනියර්(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

AMF
Associated Motor Finance Company PLC
தலைமை அலுவலகம்
இல 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய,
தொலைபேசி : 0115 553 663


# யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் வசதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவும்

### வடமாகாண அவைத்தலைவர் ஆளுநரிடம் கோரிக்கை



யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் வசதியைப் பெற்றுக்கொடுக்க வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய இலக்குகள், அபிலாஷைகள் என்ன என்பதை நாங்கள் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. நீங்கள் எங்களில் ஒருவர். இரண்டு விடயங்களை நான் சொல்லவேண்டிய நிலையில் உள்ளேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தைப் பற்றி பேசுகின்றோம். நான் அதற்கு மேலாக என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

13இன் படி நீங்கள் கொஞ்சம் தெளிவாகவும் இறுக்கமாகவும் இருப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம். அந்தவகையில் இருக்கின்ற பல விடயங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. அவற்றை எவ்வாறு மீளப் பெறலாம் என்பது பற்றி நான் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. அது உங்களுக்குத் தெரிந்த விடயமே.

சில ஆளுநர்கள் நிர்வாகத்திறனற்ற ஆளுநர்களாகவும் மாகாண முறை தெரியாதவர்களாக வும் இருக்கிறார்கள். ஆனால், உங்களுக்கு மாகாண அனுபவம் உண்டு.ஆகவே, எடுத்த விடயங்கள், எடுக்கப்பட்ட விடயங்கள் அல்லது பிடுங்கப்பட்ட விடயங்களை திரும்பப் பெறுவதிலே உங்களுடைய முயற்சி காணப்பட வேண்டும்.

மாகாணத்துக்குரியதை மத்திய அரசு எடுப்பதை நாங்கள் தவிர்க்க வேண்டும். குறிப்பாக, அது தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. மாகாணத்திற்கு உட்பட்ட விடயங்கள் எடுக்கப்படுபவற்றை தடுக்கவேண்டும். எமது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்மணி நீங்கள். எனவே, இங்குள்ள அதிகாரிகளும் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள்.

எனவே, வடக்கு மாகாண மக்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவுங்கள்.

அதேபோல, யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுங்கள். குறிப்பாக, இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதாக இருந்தது. ஆனால், அது தற்பொழுது சாத்தியமற்ற விடயமாகிவிட்டது.

யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான குடிநீரைக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளை நீங்கள் உடன் செயற்படுத்துங்கள். அதற்கு நாங்கள் எங்களாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார்.

## கச்சாய் பாதாள வைரவர் ஆலய அலங்கார உற்சவம்



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-கச்சாய் பாதாள வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து பத்து தினங்கள் அலங்காரத் திருவிழா உற்சவம் இடம்பெற்று 10ஆம் நாள் 1008சங்காபிஷேக நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலீபதுஷ்ஷாதுலி ஸூல்தான் முஹியத்தீன் காலமானார்



(பேருவளை செய்தியாளர்)

பிரபல சனமார்க்க அறிஞரும் வெலிகாமம் முர்ஸிய்யா அரபுக் கல்லூரி அதிபருமான கலீபதுஷ் ஷாதுலி மௌலவி ஸூல்தான் ஏ. முஹியத்தீன் (பஹ்ஜி) நேற்றுக் காலை (22) காலமானார்.

பலபிட்டியைச் சேர்ந்த மர்ஹூம் ஸூல்தான் ஆலிம் தம்பதியின் புதல்வாரன இவர் முர்ஸியா அரபுக் கல்லூரியின் அதிபராக நீண்ட காலமாக பதவி வகித்து அளப்பரிய சேவைகளைச் செய்து தலை சிறந்த உலமாக்களை சமூகத்துக்கு பெற்றுக் கொடுத்துள்ளார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று 22 இரவு வெலிகாமம் புதிய தெரு முஹியத்தீன் பெரிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் தரீக்காக் களின் ஸதாத்மார்கள், ஷாதுலிய்யாத் தரீக்காவின் கலீபதுல் குலபா மௌலவி எம்.இஸட். முஹம்மத் ஸுஹுர் (பாரி) உட்பட கலீபாக்கள், அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், உலமாக்கள் அரசியல்வாதிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.05.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5121
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,125,975.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 4 1 6 3 8 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3363
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,345,064.24
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 39 41 63 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1576
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,261,579.20
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 4 2 4 4 8 2

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1151
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,870,489.20
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 03 35 39 52

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 430
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,532,331.20
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 24 27 44 53
விசேட இலக்கினம் தனுசு

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1469
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 322,477,182.00
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 01 13 18 35
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த மில்லியனர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வட மாகாண ஆளுநருக்கு வவுனியாவில் வரவேற்பு



(வவுனியா நிருபர்)

வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பி. எம்.எஸ். சார்ள்ஸை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியாவில் இடம்பெற்றிருந்தது.

வவுனியா வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா நகரசபை வளைவிலிருந்து வாகனப் பவனியாக அழைத்துவரப்பட்ட ஆளுநர் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரால் வரவேற்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து வவுனியா தனியார் விடுதியில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வர்த்தக சங்கத்தின் செயலாளர், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் உட்பட்ட உறுப்பினர்கள், கந்தசுவாமி கோவில் நிர்வாகத்தினர், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழ்.பல்கலை பொருட்கள் கையாடல்: 2 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமெனத் தகவல்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பொருட்கள் கையாடல் குறித்த விசாரணைகளில் பல திடீர் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

கையாடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் மூன்றரை இலட்சம் என சம்பந்தப்பட்ட பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அறிக்கையிட்டிருந்தாலும், அது இரண்டு மில்லியன்களைக் கடந்திருக்கலாம் எனப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதனால் முறையான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்தக் கையாடல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கெனப் பேரவையினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் இருவர் விசாரணைகளில் பங்குபற்றாமல் வெளியேறியிருப்பதையடுத்து, கையாடல் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்குப் புதிதாக இரண்டு உறுப்பினர்களைப் பல்கலைக்கழகப் பேரவை நியமித்துள்ளது. கையாடல் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகுதியுடன் நேரடித் தொடர்பு இல்லாத உறுப்பினர்களைக் கொண்டு பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியத்தில் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் காணாமல் போயுள்ளதாக பராமரிப்புப் பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன், அவ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் களஞ்சியசாலைப் பணியாளர்கள் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுமிருந்தது.

எனினும், சம்பவம் தொடர்பில் அதிகாரிகளின் தவறை மறைப்பதற்காக அப்பாவித் தொழிலாளர்கள் மீது குற்றஞ்சாட்டப்படுவதாகவும் சம்பவத்துடன் நேரடித் தொடர்பில்லாதவர்களே பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டி வந்தன. இது தொடர்பாகப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கும் தொழிற்சங்கங்கள் தெரியப்படுத்தியிருந்தன.

இதனிடையே, கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கூடிய பேரவை, பூர்வாங்க விசாரணை அறிக்கையின் அடிப்படையில் களஞ்சியசாலைப் பொறுப்பாளர் ஒருவரை விசாரணைகள் முடிவுறும் வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தியதுடன் சம்பவம் தொடர்பில் அவருக்குக் குற்றப்பத்திரிகையையும் அனுப்பியிருந்தது. மேலும் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கென மூவர் கொண்ட குழுவையும் நியமித்திருந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட களஞ்சியசாலைப் பணியாளர் தன்மீதான குற்றச்சாட்டுகளை மறுத்திருக்கிறார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளிலும் இவர் தனது பக்கக் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். கோப்பாய் பொலிஸார் தனியாக விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

விசாரணைக் குழுவுக்குப் பேரவையினால் நியமிக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மே மாதம் 08 ஆம் திகதி எனத் திகதியிடப்பட்டு 10 ஆம் திகதி உரியவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. காலந் தாழ்த்திக் கடிதம் அனுப்பப்பட்ட காரணத்தால் தன்னால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் மே 12 ஆம் திகதி தான் ஐக்கிய இராச்சியத்துக்குப் பயணப்பட இருப்பதனால் விசாரணைக் குழுவில் இருந்து தன்னை விடுவிக்குமாறும் அந்த அதிகாரி பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தார். அதே நேரம், விசாரணைக் குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் வேறு காரணங்களினால் விசாரணைக் குழுவில் இருந்து விலகுவதாக அறிவித்து விலகிக்கொண்டார்

இதனையடுத்து, கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் தலைமையில் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவரையும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பிரதம கணக்காளரையும் உறுப்பினர்களாகக் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், சம்பவத்துடன் நேரடியாகச் சம்பந்தப்படாத இருவர் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பராமரிப்புப் பகுதியின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணை வறிதானதாகக் கருதப்படுகிறது.

மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள பூர்வாங்க விசாரணைகளின் போதும், அதனடிப்படையில் தொடரப்படவுள்ள முறையான விசாரணைகளின் முடிவில் இன்னும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரலாம் என்பதோடு இக் கையாடலுடன் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரிகள் சிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்கு தெரிவான மாணவர்களை உடனடியாக அனுமதிக்குக

## மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணிப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு காத்திருப்புப் பட்டியலின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உடனடியாக அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திறமை ஒழுங்கில் வெற்றிடங்களை நிரப்பும் முகமாகத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களைப் பதிவுசெய்வதற்கு அனுமதிக்காமல் திருப்பியனுப்பும் அதிகாரம் பீடாதிபதிகளுக்கு இல்லையென்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றி, அந்தந்தப் பல்கலைக் கழகங்களின் வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் முதற் பட்டியலின் படி 2021/2022 கல்வி ஆண்டுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டன. எனினும், உயர்தரப் பெறுபேறுகளின் மீளாய்வுக்குப் பின்னர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களை வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் மூலம் அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. ஆனாலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் காணப்படும் வளப் பற்றாக்குறை காரணமாக 2021/2022 கல்வி ஆண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களே அனுமதிக்கப்படுவர். ஆயினும், 2021/2022 கல்வி ஆண்டுப் பிரிவினருடனேயே அவர்கள் கல்வி கற்க முடியும் என மாணவர்கள் அனுமதிக்காகப் பதிவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே அனுமதிக்கப்படும் மாணவர்களின் பதிவை நிராகரிக்கும் அதிகாரம் பீடாதிபதிக்கு இல்லை என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொறியியல் பீடத்தினால் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் தொகை என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு உட்பட்டே வெற்றிடங்கள் நிரப்பும் பட்டியலும் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை அனுமதிப்பதில்லை எனப் பீடம் முடிவெடுக்க முடியாது. மானியங்கள் ஆணைக்குழுவினால் தெரிவுசெய்யப்படும் மாணவர்களை அனுமதித்தே ஆகவேண்டும்.

அனுமதிக்க முடியாத நிலைமை இருந்தால் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பீடாதிபதி அது பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்க வேண்டும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு ஞாயிறு தின விடுமுறை

## அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன் தினம் (21) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்,மாணவர்கள் தற்போது கைத்தொலை பேசிக்குள் மூழ்கியிருக்கிறார்கள். அதிலிருந்து மாணவர்களை விடுபடவைக்க கலைச் செயற்பாடுகளுக்குள் ஈடுபடுத்த வேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது மாணவர்களை கலைச் செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்கவேண்டும்.

என்னுடைய அடுத்த முயற்சி வாரத்தில் ஒருநாள் குறிப்பாக, ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதே எனத் தெரிவித்தார்.

# 80 இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கம் பேராதனையில் களவு

(கண்டி செய்தியாளர்)

கண்டி, பேராதனை வீதியில் சுற்றுலாத் துறையினருக்கு மாணிக்கக் கற்கள் விற்கும் வர்த்தக நிலையமொன்றில் பல இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கல் ஒன்று தந்திரமான முறையில் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி சுமார் 80 இலட்சம் ரூபா எனவும் இது நீல நிற மாணிக்கக்கல் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பிரபல மாணிக்கக்கல் விற்பனை நிலையத்துக்கு வந்த மூவர் கல்லைப் பரிசோதிப்பதாகக் கூறி உண்மையான கல்லின் வடிவையொத்த போலியான நீலக் கண்ணாடியை வைத்துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் கோடீஸ்வரர் போல் நடித்த நபரொருவர் மற்றும் இரு தரகர்களுடன் கூடவே வந்து இரத்தினக்கற்களைப் பரிசோதிக்கும் போர்வையில் போலியான கல்லைப் பயன்படுத்தி 80 இலட்சம் ரூபா பெறுமதியான உண்மையான மாணிக்கக் கல்லைத் திருடி அந்த இடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோசடி நபர்கள் இதற்கு முன்னர் ஒருவர் மூலம் உண்மையான மாணிக்கக் கல்லின் வடிவத்தைப் பார்த்து அதே வடிவில் போலி மாணிக்கக் கல்லை வடிவமைத்திருக்கலாம் எனவும் அதனையே இக்களவுக்குப் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு கமராக்களில் இருந்து பெறப்பட்ட படங்களை வைத்து சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமையல் எரிவாயு கசிந்து ஹோட்டலில் தீ விபத்து

## நுவரெலியாவில் மூவர் காயம்

(நானுஓயா செய்தியாளர்)

நுவரெலியாவின் பிரதான நகரில் புதிய கடை வீதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் சமையல் எரிவாயு கசிந்து ஏற்பட்ட தீ விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கம்போல் உணவகத்தில் சமையல் வேலை செய்வதற்கு எரிவாயு அடுப்பை செயற்படுத்தியபோதே வாயுக்கசிவு ஏற்பட்டு தீ விபத்து ஏற்படுள்ளது.

இதனையடுத்து ஹோட்டலில் தொழில் புரியும் ஊழியர்களும் ஏனைய வர்த்தக நிலையங்களின் ஊழியர்களும் ஒன்றிணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இச்சம்பவத்தில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லையெனவும் காயமடைந்தவர்கள் மூவரும் 42, 44, 63 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நோட்டன் பகுதியில் மர நடுகைத் திட்டம்



(மஸ்கெலியா செய்தியாளர்)

ஹட்டன் வனவளத் திணைக்களக் காரியாலய அதிகாரிகள் ஏற்பாடு செய்த மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு நோட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள எபடின் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராம மக்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சார்பில் இளைஞர்கள் மற்றும் ஹட்டன் வனவளத் திணைக்கள காரியாலய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வனப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஹட்டன் வனவளத் திணைக்கள காரியாலய அதிகாரிகளான வீ.ஜே.கே.ருக்ஷான், திருமதி ஹன்சிகா பண்டார, நுவான் பிரியதர்ஷன, நிஷாந்த சம்பத், சுரேஷ் ஜயதுங்க, திலினி ஹர்ஷினி மற்றும் பீ.டி.பியதுங்க ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டினர்.

நாட்டின் தேவைக்கேற்ப நீர் ஊற்றுகளைப் பெருக்கவும் அதிகளவில் மழை வீழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளவும் மக்கள் பாவனையில் இல்லாத இடங்களை இனம் கண்டு மத்திய மலைநாட்டில் இவ்வாறான மரக்கன்றுகள் நடுகையை மேற்கொள்வதாக ஹட்டன் வனவளத் திணைக்களக் காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பார ஊர்தியொன்று வெலிமடையில் விபத்து



(ஆ.ரமேஸ்)

வெலிமடை கெப்பட்டிபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரேந்தபொல பகுதியில் இன்று அதிகாலை பார ஊர்தியொன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்திக்காக தார் மற்றும் மண்ணெண்ணை ஆகியவற்றை ஏற்றி சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான பார ஊர்தி ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து நுவரெலியா-பதுளை பிரதான வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவத்தில் பார ஊர்தியை செலுத்தி வந்த சாரதி மற்றும் மேலும் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் கெப்பட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பல்லேஹெலவில் மண்சரிவு; அச்சத்தில் குடியிருப்பாளர்கள்!



(தலவாக்கலை நிருபர்)

வெலிமடை - ஊவா பரணகம வீதியில் தரகல பல்லேஹெல பகுதியில் நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட மண்சரிவினால் வீதியின் ஒரு புறம் முற்றாக மூடப்பட்டுள்ளது. இதனால் மேலும் மண்சரிவு ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதால் தாம் அச்சத்தில் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மண்மேட்டை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். பாரிய மண்மேடொன்று சரிந்து வீதியில் வீழ்ந்தமையினாலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மண்மேடு சரிந்த இடத்திற்கருகில் குடியிருப்புடன் கூடிய கடைத்தொகுதி ஒன்றும் காணப்படுவதால் அக்கட்டிடத்திற்கும் ஆபத்து ஏற்படலாம் என அதன் உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த கட்டிடத்தை மண்சரிவி லிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கித்துல் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டக் கிராமப்புற மக்களின் ஜீவனோபாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் காளான் மற்றும் கித்துல் செய்கைத்துறைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கெள்ளும் வகையில் விவசாய அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர இப்பகுதிக்கு விஜயம் செய்து இத்தொழிற்றுறைகளில் ஈடுபடும் மக்களுடன் கலந்துரையாடி அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க இரத்தினபுரி, எஹலியகொடை, ரத்கங்க உட்பட பல இடங்களில் பரவலாக இடம்பெற்றுவரும் கித்துல் தொழிற்றுறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பல இடங்களிலும் கலந்துரையாடல்களை நடத்தினார்.

இப்பிரதேசத்தில் பாரம்பரியமாக இடம்பெற்று வரும் இத்தொழில்கள் குறித்த அடையாளத்தை உறுதிப்படுத்த பொருத்தமான அமைப்புகள் இல்லாதிருப்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கிணங்க புதிய அதிகார சபையை உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# விறகு வெட்டச் சென்றவர் ஹாவாஎலியவில் மாயம்

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹவாஎலிய தோட்ட வனப்பகுதியில் விறகு வெட்டச் சென்ற நபரொருவர் காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் வீடு திரும்பாததையடுத்து நுவரெலியா பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நுவரெலியா பொலிஸ் அதிகாரிகள், இராணுவம் மற்றும் பிரதேசவாசிகள் கூட்டாக இணைந்து குறித்த நபரைத் தேடும் நடவடிக்கைகளை வனப்பகுதியில் ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது வனப்பகுதியின் மத்தியில் காணாமல் போனவருக்குச் சொந்தமானதென சந்தேகிக்கப்படும் ஒரு ஜோடி காலணிகள் மற்றும் மேற்சட்டை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதேவேளை, காணாமல்போன நபர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் பொலிஸ் மோப்ப நாய்களைப் பயன்படுத்தி தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இந்தியர்கள் இருவர் கைது

(மனுர சுதத் செல்லஹேவா)

வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் ஒருவகை போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த இந்தியர்கள் இருவரை பொல்பிட்டிய பகுதியில் கைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கலுகல என்ற இடத்தில் பொலிஸார் நடத்திய சோதனையின்போதே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பயணித்த வேன் ஒன்றை சோதனைக்குட்படுத்தியபோதே வெளிநாட்டு சிகரெட்டுகளும் போதைப்பொருளும் மீட்கப்பட்டதாக பொல்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி. சுபசிங்க தெரிவித்தார்.

# மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்பேன்

## கடமையேற்பு நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் உறுதி

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்கு தீர்வு பெற்றுக்கொடுக்க முயற்சிப்பேன் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எச்.எம். சார்ள்ஸ் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியினால் அண்மையில் நியமிக்கப்பட்ட திருமதி பி. எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இதனையடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளுநர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எனக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக நேற்று வருகை தந்த மதகுருமார் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்கு தீர்வு பெற்றுத்தருமாறு கூறியிருக்கின்றார்கள். எனவே, அந்த விடயத்தை சரியான முறையில்



அணுகி அதற்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிப்பேன்.

இந்த மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து இன மக்களும் தங்களுடைய தனித்துவமான மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

அந்த வகையில் அதற்கான சகல ஏற்பாடுகளையும் எடுக்க நான் முயற்சிக்கின்றேன்.

அதேபோல அவைத்தலைவர் சி. வி. கே. சிவஞானம் வட மாகாண மக்கள் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எதிர்கொண்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக்கூறியிருந்தார்.

ஏற்கனவே பாலியாறு சம்பந்தமான பிரேரணையை தயாரித்து வைத்திருப்பதாகவும் அதனை முன்னெடுத்துச்செல்லும்படியும் கூறியிருக்கின்றார். அது சம்பந்தமாகவும் நான் உரிய நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக உள்ளேன். யாழ்ப்பாண மக்களுக்கு நீண்ட காலமாக இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினை குறித்து மனப்பூர்வமாக உணர்ந்திருக்கின்றேன். நான் கூட இங்கு வருகின்றபோது குடிநீர்ப் பிரச்சினையை தனிப்பட்ட ரீதியாக உணர்ந்திருக்கின்றேன்.

எனவே, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நிச்சயமாக கவனமெடுப்பேன் எனவும் தெரிவித்தார்.

# சுயமாக செயற்படவேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்

(சாவகச்சேரி நிருபர்)

அரசாங்கத்தை சகல விடயங்களுக்கும் நம்பியிருக்காது சுயமாக செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

வரணி ஒன்றியம் மற்றும் இலங்கை இராணுவம் என்பவற்றின் ஒத்துழைப்போடு புனரமைக்கப்பட்ட வரணி மத்திய கல்லூரியின் கட்டடத் திறப்புவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் சுமூகமான நிலைமை இருக்கவில்லை.

30வருட காலத்துக்கும் மேலான உள்நாட்டு யுத்தம் காரணமாக இந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.ஒரு வருடத்தில் பல பாடசாலைகளில் மாறி மாறி கற்கவேண்டிய நிலைமை பலருக்கும் ஏற்பட்டிருந்தது.ஆனால், இன்று அதிலிருந்து மீண்டு வடக்கு மாகாணம் கல்வியில் வீறு நடை போடுகிறது. அதேபோன்று கிழக்கு மாகாணத்தினரும் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்து வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச நடன விழாவுக்குச் சென்றிருந்தேன். விழா மிக கோலாகலமாக இடம்பெற்றிருந்தது.ஆனால், அந்த நிகழ்வானது நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பின் மூலமே இடம்பெற்றது.மத்திய கல்வியமைச்சோ அல்லது மாகாணக் கல்வியமைச்சோ ஒரு



சதத்தைக்கூட அந்த நடன நிகழ்வுக்கு வழங்கியிருக்கவில்லை. இவ்வாறான செயற்பாடுகள் தான் இன்று தேவை.

தொட்டதற்கெல்லாம் அரசாங்கத்தையும் - அமைச்சையும் நம்பியிருப்பது இந்தக் காலத்துக்கு ஒருபோதும் பொருத்தமாக அமையாது.

நாம் தற்போது சுயமாக செயற்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

இலங்கையில் 10,146 அரச பாடசாலைகள் உள்ளன. அதில் 396 தேசிய பாடசாலைகளும் ஏனையவை மாகாணப் பாடசாலைகளாகவும் இருக்கின்றன.

இலங்கையின் மிகச் சிறந்த பாடசாலையாக கொழும்பு றோயல் கல்லூரி கருதப்படுகிறது. அங்கு ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கற்கின்றனர். அப்படிப்பட்ட சிறந்த பாடசாலையிலும் பிரச்சினை இருக்கத் தான் செய்கிறது. சாதாரண கிராமத்தில் 50மாணவர்களைக் கொண்ட பாடசாலையிலும் பிரச்சினை காணப்படுகிறது.

பிரச்சினைகளின் தன்மை வேறுபடுகின்றதே தவிர சகல இடங்களிலும் பிரச்சினை உள்ளது.

எனவே, அதற்கேற்ப எம்மைத் தயார்படுத்தி செயற்படுவதே புத்திசாலித்தனமாகும் என்றார்.

# பால்நிலை சமத்துவத்துக்கு எதிரான வன்முறைகளை தடுத்தல்

## யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்



யாழ். மாவட்டத்தில் பால்நிலை சமத்துவத்துக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் சிறுவர், பெண்கள் தொடர்பாக அரசசார்பற்ற நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்ற திட்டங்கள் என்பன தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் 19 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண பெண்கள் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவனங்களான SOS Children'sWomen in Need>Center for Women development ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளர், சிறுவர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் ஹைக்கூ உலக மாநாடு

## புரவலர் ஹாசிம் உமர் பங்கேற்பு



அந்தமான் தமிழர் சங்கம், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், "தூண்டில்" ஹைக்கூ கவிதை இதழ் மற்றும் இனிய நந்தவனம் என்பன இணைந்து தமிழ் ஹைக்கூ இரண்டாவது உலக மாநாட்டை நடத்தவுள்ளன.

அந்தமான் தமிழர் சங்கத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும் புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகத் தலைவருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்வார்.

அத்துடன், அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல்.மூர்த்தி, தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கச் செயலாளர் மு. முருகேஷ், திசை எட்டும் இதழ் ஆசிரியர் குறிஞ்சி வேலன் உட்படப் பலர் சிறப்பதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது கவியரங்கம், கருத்தரங்கம், விருது வழங்கல் என்பன இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

# விகாரைகளை நிறுவும் இராணுவத்தினர் பாடசாலைகளை அமைக்கவும் முன்வருக!

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள்



(சாவகச்சேரி நிருபர்)

விகாரைகளை நிறுவும் இராணுவத்தினர் பாடசாலைகளை அமைக்க முன்வர வேண்டுமென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வரணி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கட்டடத் திறப்பு விழாவில் விஷேட விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அனுமதியின்றி அத்துமீறி அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் பூதாகரமாக வெடித்திருந்தது. அப்போது நான் கூட இராணுவம் இன முறுகலைத் தூண்டுகிறது என்று கூறியிருந்தேன்.

ஆனால், இன்று வரணியில் இராணுவம் முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளது. வரணி ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடனும் இராணுவத்தின் சிரம உழைப்புடனும் வரணி மத்திய கல்லூரியின் வகுப்பறைக் கட்டடங்கள் மீள புனரமைக்கப்பட்டுள்ளன.

இதற்காக இராணுவத்தினர் 1,600மனித வலுவினை அர்ப்பணித்துள்ளனர். இந்தச் சிரம உதவி வரணி ஒன்றியத்தின் நிதிக்கு மூன்று மடங்கு வலுச்சேர்த்துள்ளது.

நாம் மறுபடியும் செங்கல் செங்கல்லாக எமது வாழ்வைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இத் தருணத்தில் கிடைத்திருக்கும் இந்த உதவியை பாராட்டாமல் இருக்க முடியாது.

இதுபோன்ற முன்னுதாரணமான செயற்பாடுகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ள வேண்டும்.

எங்கள் மக்கள் இழந்ததை மறுபடியும் ஈடுசெய்யவேண்டுமானால் பொருளாதார ரீதியாகப் பலமடைய வேண்டும். பொருளாதார ரீதியாகப் பலமடைய கல்வியை ஆயுதமாக எடுக்க வேண்டும். கல்வி மேம்பாட்டுக்கு உதவி செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் மற்றும் முயற்சி ஆகியன பாராட்டுதற்குரியவை.

அரசியல்வாதிகள் மற்றும் மாகாணசபைகள் மேற்கொள்ள வேண்டிய பல வேலைத்திட்டங்களை வரணி ஒன்றியம் தமது பிரதேசத்தில் முன்னெடுத்து வருகின்றது. குறைந்து வருகின்ற பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்காக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வரணி ஒன்றியம் முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# நீரில் மூழ்கி மாணவி உயிரிழப்பு



(உடப்பு செய்தியாளர்)

நண்பர்களுடன் நீராடச் சென்ற மாணவியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

உடப்பு முதலாம் வட்டாரத்தில் வசிக்கும் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் 12ஆம் தரத்தில் கல்வி கற்கும் சண்முகம் கேதிஷா (17வயது) என்ற மாணவியே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த குறித்த மாணவி சக நண்பர்களுடன் புளிச்சாக்குளம் பகுதியிலுள்ள குளம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் (21)நீராடச் சென்றுள்ளார். அப்போது குளித்துக் கொண்டிருந்த வேளை அவர்கள் நீரில் மூழ்கியுள்ளனர். இந்நிலையில், அயலவர்களின் உதவியுடன் சக நண்பர்கள் நான்கு பேரும் காப்பாற்றப்பட்டதோடு மேற்குறித்த மாணவி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே தேவை

## அகம் மனிதாபிமான வளநிலைய தலைவர் கண்டுமணி லவகுகராசா





(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இன்றுவரை எட்டாக்கனியாகவே இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகார பரவலான அரசியல் தீர்வே அவசியம் என அகம் மனிதாபிமான வளநிலையத் தலைவர் கண்டுமணி லவகுகராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு தன்னாமுனை மியாமி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்ற இளைஞர் - யுவதிகளுக்கான அறிவூட்டும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் இதுகுறித்து தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பு கடந்த 70 வருடமாக வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் கோரிவருகின்றது

இதனடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக முன்னெடுப்பதற்காக கடந்த வருடம் வடக்கு, கிழக்கில் இருக்கின்ற மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு கோரிக்கையை மையப்படுத்தி 100 நாள் செயற்றிட்டத்தை நடத்தியிருந்தோம்.

அதன் இறுதி நாளான நவம்பர் 8ஆம் திகதி இலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வாக ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த- மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகார பரவலான அரசியல் தீர்வைப் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

அதிகாரப்பகிர்வு, கருத்துருவாக்கம் கட்டாயம் மக்கள் மயப்படுத்தப்படவேண்டும் என்ற விடயங்களைத் தெளிவுபடுத்தி வருகின்றோம். இது மக்கள் மயப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில்தான் தேசிய ரீதியாக - சர்வதேச ரீதியாக பலம் பொருந்தியதாக இருக்கும் என்றார்.

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் மரணம்

அம்பாந்தோட்டை, சுச்சி கிராமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவத்தில் அம்பாந்தோட்டை – சிறிபோபுர பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திருமணம் செய்துகொள்வதாகக் கூறி நடிகையிடம் ரூ. 6.5 மில். நிதி மோசடி

## பேஸ்புக்கில் சூட்சுமமாக ஏமாற்றியவருக்கு விளக்கமறியல்

பேஸ்புக் மூலம் நடிகை ஒருவருடன் நட்பாகப் பழகி அவரைத் திருமணம் செய்துகொள்வதாக வாக்குறுதியளித்து அவரிடமிருந்து 6.5 மில்லியன் ரூபா நிதிமோசடிசெய்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் கொழும்பு மற்றும் கம்பஹா நீதிமன்றங்களில் கடமையாற்றும் இரண்டு இளம் சட்டத்தரணிகளுடனும் ஏற்கனவே நட்பாகப் பழகி அவர்களைத் திருமணம் செய்துகொள்வதாக வாக்குறுதியளித்து குறித்த இருவரிடமும் 9.9 மில்லியன் ரூபா வரை நிதி மோசடி செய்திருப்பதும் தெரியவந்துள்ளது.

இரத்தினபுரி, கஹவத்தையைச் சேர்ந்த லசந்த லியனகே (வயது 27) என்ற சந்தேக நபர் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் அழகியல் கற்கை நெறியை மேற்கொள்வதுடன், நடிகையாகப் பணிபுரிந்துவரும் மினுவாங்கொடை, பட்டதுவன பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான யுவதியே மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சந்தேகநபர் பேஸ்புக் ஊடாக யுவதியுடன் நட்பை வளர்த்து பின்னர் யுவதியின் வீட்டுக்கு பலமுறை சென்றுவந்துள்ளதாகவும் இருவருக்குமிடையே காதல் மலர்ந்ததையடுத்து மனுதாரரின் பெற்றோரும் திருமணத்துக்கு சம்மதித்திருப்பதாகவும் அதன்பிறகு சந்தேக நபர் பல்வேறு தேவைகளை முன்வைத்து நடிகையிடம் 6.5 மில்லியன் ரூபா பெற்றுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகநபர் கொழும்பு நீதிமன்றில் பணிபுரியும் சட்டத்தரணி ஒருவரை திருமணம் செய்துகொள்வதாக வாக்குறுதியளித்து அவரிடமிருந்து 5.5 மில்லியன் ரூபாவும் கம்பஹா நீதிமன்றத்தில் பணிபுரியும் சட்டத்தரணியொருவரையும் திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதியளித்து அவரிடமிருந்து 4.9 மில்லியன் ரூபா மோசடி செய்துள்ளதும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர்கள் மற்றும் நடிக நடிகைகளுடன் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்களுடன் பேஸ்புக் கணக்கை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் சமூகநல ஆர்வலராக செயற்படுவதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிவந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# மாற்றுத்திறனாளி மீது பாலியல் துஷ்பிரயோகம்: விசாரணை ஆரம்பம்

மாற்றுத்திறனாளியான 26 வயது யுவதியை அவரது தாய்க்கு முன்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து கொஸ்கொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ் கான்ஸ்டபிளின் நோய்வாய்ப்பட்டுள்ள தாயை கவனிப்பதற்காக மாற்றுத்திறனாளியான யுவதியும் அவரது தாயும் டிபாலிஸ் கான்ஸ்டபிளின் வீட்டில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் கான்ஸ்டபிள் தனது 10,000 ரூபா பணம் காணாமல் போனதாகக் குறிப்பிட்டு தாய் மற்றும் மகளை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று சோதனையிட்டுள்ளார்.

இதன்போது தனது தாய்க்கு முன்பாக நிர்வாணமாக்கப்பட்டதாகவும் பணத்தைத் தேடும் போது பொலிஸ் கான்ஸ்டபிள் தனது அந்தரங்க உறுப்புகளை தொட்டதாகவும் குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் முறைப்பாடு செய்ததற்கு முதல்நாள் பொலிஸ் கான்ஸ்டபிளும் அவரது பணப்பையில் இருந்த 10,000 ரூபா பணத்தைக் காணவில்லையென கொஸ்கொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாகக் கூறப்படும் 26 வயதுடைய யுவதி மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடினார். திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் திங்கட்கிழமை(22) இந்த சந்திப்பு இடம்பெற்றது.(அப்துல்சலாம் யாசீம்)

# கிழக்கு ஆளுநர் – யுனான் மாகாண பிரதிநிதிகளுக்கிடையில் சந்திப்பு





(கிண்ணியா செய்தியாளர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் யுனான் மாகாண பிரதிநிதிகளுக்கு மிடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(21) இடம் பெற்றது.

இதன்போது யுனான் பல்கலைக்கழக மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இருதரப்பு வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாண மக்களுக்கு மனிதாபிமான நிவாரணங்களையும் வழங்கி வைத்தனர்.

இதன்போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ஆகியோருடன் யுனான் ஆளுநர் வாங் யூபோ, சீனத் தூதுவர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் தலைமையிலான குழுவினர்கள் பங்கேற்றிருந்தனர்.

# ஆளுநர் விடயத்தில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை

## முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப்

(கிண்ணியா செய்தியாளர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமைசாலிகளையே ஆளுநராக நியமித்துள்ளார். ஆனாலும், கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை முஸ்லிம்கள் எதிர்பார்த்த நிகழ்வு நடைபெறவில்லை என முன்னாள் பிரதியமைச்சரும் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் திங்கட்கிழமை(22) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒன்பது மாகாணங்களுக்கும் ஆளுநர் நியமிக்கப்படுகின்றபோது கிழக்கு மாகாணத்தில் ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவார் என்கின்ற எதிர்பார்ப்பு முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இருந்தது. இருந்தபோதிலும் கிழக்கு மாகாண ஆளுநரான செந்தில் தொண்டமானின் நியமனத்தை வரவேற்கின்றோம். எமது கட்சியும் வரவேற்கின்றது. காரணம், அவர் ஒரு தமிழ்ப் பேசும் மகன்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கூடுதலான பெருந்தோட்ட மக்கள் குடியேறி அவர்கள் சார்ந்த தொழில் களை செய்கின்றார்கள். அவர்கள் மூன்றாந்தரப் பிரஜைகளாக காணப் பட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் நிதியினை ஒதுக்கி கொடுத்து ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றோம்.

ஆளுநர் செந்தில் தொண்டமானின் நியமனம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல கிழக்குவாழ் தோட்டத் தொழிலாளர்களையும் ஒரு சமூகமாக இணைத்துப் பார்ப்பதற்கான ஒரு வசதியை ஏற்படுத்தியுள்ளது.

எங்களுக்கான ஆதரவை தமிழர்கள் வெளிப்படையாக பேச வேண்டும். எமக்கு காணிப் பிரச்சினைகள் இருக்கின்றன. எமது சமூகத்தின் தலைமைத்துவங்கள் பறிக்கப்படுகின்றன.

முஸ்லிம் சமூகம் மதரீதியாக இனங்காணப்பட்ட ஒரு சமூகம். மொழியால் இனம் என்ற வகையிலே இந்துக்களும் கிறிஸ்தவர்களும் தமிழர்கள் என அழைக்கப்படுகின்றபோது, பௌத்த சிங்களவர்களும் சிங்களம் பேசுகின்ற கிறிஸ்தவர்களும் பௌத்தர்கள் என அழைக்கப்படுகின்றபோது மதரீதியாக நாங்கள்



முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றோம்.

முஸ்லிம் சமூகத்தை தனி சமூகம் எனக் கருதி பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்க்க வேண்டும். வெள்ளைவேனில் ஆள் கடத்துவதும் முச்சக்கரவண்டிகளில் ஆள் கடத்துவதும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(மாளிகைக்காடு செய்தியாளர்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் மிகவும் அதிகஷ்ட, தொழில் வாய்ப்பற்று வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் 92 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இணைந்த கரங்கள் அமைப்பினால் ஆயித்தியமலை மட்/ நரிப்புல் தோட்டம் நடேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் வேலுப்பிள்ளை மாதவன் தலைமையில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான நிதிப்பங்களிப்பினை அவுஸ்திரேலியா சிட்னி நகரில் வசிக்கும் ராஜா சூப்பர் மார்க்கட் உரிமையாளர் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கணேஸ், விசேட அதிதியாக ஆயித்தியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ரி.வித்தியானந்தன், அவுஸ்திரேலிய சிட்னி ராஜா சூப்பர் மார்க்கட் உரிமையாளரின் சகோதரர் ஆர்.தயாளன் மற்றும் கே.மனோகரன், ஆர்.மனோநிலா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மூதூர், கந்தளாய் செய்தியாளர்கள்)

மூதூர் வலயக் கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள 12 தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(21) மாலை இடம்பெற்றது.

இதன்போது 150 மாணவர்களுக்கு தலா 4ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் திருகோணமலை கிளையின் ஏற்பாட்டிலும் அமைப்பின் தலைவர், கிழக்கு மாகாண இணைப்பாளர் சுந்தரமூர்த்தி தீபராஜ் தலைமையிலும் வணிகத்தி வலைப்பின்னலின் அனுசரணையிலும் இவ் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கிராமிய கல்வி அபிவிருத்தி அமைப்பின் ஆலோசகர்கள், உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், மூதூர் பிரதேச தமிழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சத்திர சிகிச்சை பிரிவு திறந்துவைப்பு



(பாண்டிருப்பு செய்தியாளர்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பாதுகாப்பு, சுகாதார தகவல் மையம், என்பியல் விடுதி மற்றும் என்பியல் சத்திர சிகிச்சை கூடப் பிரிவுகள் புதிதாக திறக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஸ்ரீசந்திர குப்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன் சுகாதார அமைச்சின் அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது திறந்து வைக்கப்பட்ட நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம் இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரிவாகும். இப் பிரிவானது வைத்தியசாலை பணிப்பாளரின் ஆலோசனைப்படி பிரதி பணிப்பாளர் டாக்டர் ஜெ.மதன் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டது.

நோயாளர் மற்றும் அவரது குடும்பத்தினரின் நோய் நிலைமை பற்றிய ஈடுபாடு மற்றும் ஆலோசனைகள், நோயாளர் சுகாதார தகவல்கள், நோயாளர்களுக்கான உதவியாளர் ஏற்பாடு மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் உள்ளிட்ட இலவச அமர் ஊர்தி ஏற்பாடுகள், இறப்பு சான்றிதழ் பெறுவதற்கான நடைமுறைகள் போன்ற இன்னும் பல சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கவுள்ளது.

# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டல்



(பாலமுனை செய்தியாளர்)

பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலயத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில்(17) இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா பிரதம அதிதியாகவும் அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றஸ்மி, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திணைக்கள பிரதிப்பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ், பாடசாலை இணைப்பாளர் ஏ.எல்.பாயிஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், றிசாட் ஆதம் லெவ்வை ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

மேலும் பிரதி அதிபர் ஐ.எம்.பாஹிம், உதவி அதிபர் யூ.எல்.அலி அஸ்ரப், பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் எஸ்.எச்.தம்ஜீத் உட்பட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதன்போது மாணவத்தலைவர்கள் அதிதிகளின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன் அவர்களுக்கான சின்னம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஏறாவூரில் 'ஹங்ரி ப்ளாஸ்ட்' உணவுத் திருவிழா





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலகத்தின் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஹங்ரி ப்ளாஸ்ட்' உணவுத் திருவிழா பிரதேச செயலக முன்றலில் அண்மையில்(19) இடம்பெற்றது.

இதன்போது பிரதேசத்தில் சிறு கைத்தொழில் உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் சுயதொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை விற்பனையில் ஈடுபடுத்தினர்.

பிரதேச மக்களுடன் அலுவலக ஊழியர்களும் அவற்றைக் கொள்வனவு செய்து முயற்சியாளர் ஊக்கப்படும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். மேலும் ஏறாவூரில் புகழ்பெற்ற உற்பத்தியான முந்திரியம் பருப்பு, பல வகை முறுக்கு, பாண், ஞானகத்தா பிஸ்கட் போன்ற வெதுப்பக உற்பத்திகள், சர்பத் போன்ற குளிர்பானம், மரவள்ளிக் கிழங்குப் பொறியல் போன்ற பாரம்பரிய மற்றும் பல்வேறு பொருட்களை காட்சிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மத்திய சுகாதார அமைச்சினால் கிழக்கு மாகாணத்துக்கு நியமனம் செய்யப்பட்ட 5 பொது சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு மாகாண சுகாதார அமைச்சில் திங்கட்கிழமை (22) இடம்பெற்றது. இவர்களுக்கான நியமனக் கடிதங்களை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் வழங்கி வைத்தார். (மீனோடைக்கட்டு செய்தியாளர்)

# ஸபூர் சனச கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு நிதியுதவி



(பொத்துவில் செய்தியாளர்)

சம்மாந்துறை ஸபூர் சனச சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் 92 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை ஸபூர் சனச சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் சனிக்கிழமை (20) சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது 92 அங்கத்தவர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் சேமிப்பு இலாபத்திலிருந்து நிதி வழங்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை கருத்திற்கொண்டு அங்கத்தவர்களின் நலன்கருதி குறித்த நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ.எம்.றஷீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.ஜலால்டீன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.நிசாமுத்தீன், ரி.எல்.டிபாசத்துல்லாஹ், எஸ்.ஜாபீர் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.





அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரின் வழிகாட்டலில் சமுர்த்திப் பிரிவும் சமூக சேவைப்பிரிவும் இணைந்து டெங்கு ஒழிப்பு சிரமதானத்தை முன்னெடுத்திருந்தது. இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் றிசித் எகியா மற்றும் தலைமைப்பீட முகாமையாளர் எம்.பீ.எம்.ஹுசைன், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.பைசால், திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஜே.நிஃமதுள்ளா மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன்போது புதிய இன வாழைமரம் ஒன்று உதவிப் பிரதேச செயலாளரால் நட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (திராய்க்கேணி செய்தியாளர்)

# சமூகமட்ட தொடர்பாடலை ஏற்படுத்தும் செயற்றிட்டம்



(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை எழுத்தாணி அமைப்பினால் ஊடகவியலாளர்களுக்கும் சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகளுக்குமான சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும் சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை(19) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் விவசாய சங்கப் பிரதிநிதிகள், மாற்றுத் திறனாளிகள், சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மாதர்சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பிரதேசத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை அறிமுகப்படுத்தியதுடன் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்ட சம்பந்தப்பட்ட தரப்புக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமென எழுத்தாணி அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதில் எழுத்தாணி கலைப் பேரவையின் தலைவர் வடமலை ராஜ்குமார் உட்பட ஊடகர்களும் கலந்துகொண்டனர்.

# சம்புநகர் வீட்டுத்திட்டத்துக்கான காணிப்பத்திரம் வழங்கிவைப்பு

## முஷாரப் எம்.பியின் முயற்சிக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவிப்பு



(திராய்க்கேணி செய்தியாளர்)

2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட விஷேட தேவையுடையோர்களுக்கான வீடுகள் அட்டாளைச்சேனை சம்புநகர் கிராமத்தில் 2008ஆம் ஆண்டளவில் கட்டிமுடிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன. இருந்தபோதும், அவர் களுக்கான உரிமைப்பத்திர ஆவணங்கள் இதுவரையும் வழங்கப்படாமல் இருந்துள்ளது.

இது குறித்து பல அரசியல் தலைவர்களிடத்தில் கடந்த காலங்களில் எத்தி வைத்தும் ஏமாற்றமே மிஞ்சிய நிலையில் இருந்து வந்தது. இந் நிலையில், கடந்த வருடம் சம்பு நகருக்கு அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங் களுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் விஜயம் செய்தபோது குறித்த உரிமைப்பத்திரங்களைப் பெற்றுத்தருமாறு அந்த வீட்டுத்திட்ட மக்கள் வினயமாகக் கேட்டுக்கொண்டனர்.

இதனையிட்டு, முஷாரப் எம்.பி. மேற்கொண்டு வந்த தொடர்ச்சியான முயற்சிகளால் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட காணி ஆணையாளர், வீடமைப்பு அதிகார சபைத் தவிசாளர்உள்ளிட்ட அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி கடந்த திங்கட்கிழமை(15) குறித்த பயனாளிகளுக்கான ஆவணங்களை வழங்க முடியுமாயிருந்தது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற குறித்த பயனாளிகளுக்கான உரிமைப்பத்திரம் வழங்கும் நிகழ்வில், அண்மையில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த மருதமுனை சுனாமி வீட்டுத்திட்டத்தைத் தீர்த்த கையோடு தொடர்ச்சியாக அட்டாளைச்சேனை சம்பு நகர் பிரச்சினையையும் தீர்த்து வைத்ததையிட்டு நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் முயற்சியை பெரிதும் சிலாகித்ததோடு, பயனாளிகளும் தமது நன்றிகளைப் பகிர்ந்துகொண்டனர்.

# கொக்குவில் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள குப்பிளாமடு பிரதேசத்தில் வீதியின் குறுக்கே உள்ள மழைநீர் வழிந்தோடும் வடிகான் பள்ளத்தின் ஊடாக பிரயாணித்த மோட்டார் சைக்கிள் வீதியைவிட்டுவிலகி மரத்துடன் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (21) இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குப்பிளாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய லோகிதராஜா கோவிந்தராஜா என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சம்பவதினம் இரவு 8.30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பிரயாணித்தபோது குப்பிளாமடு வீதியின் குறுக்கே உள்ள மழைநீர் வழிந்தோடும் பள்ளத்திலிருந்து மேல்நோக்கிச் செல்லும்போது வீதியைவிட்டு மோட்டார்சைக்கிள் விலகி மரத்துடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பல்நோக்கு கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை கலைப்பு

## அட்டாளைச்சேனை ஆணையாளர் அறிவிப்பு

(திகாமடுல்ல செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு 2023.01.04ஆம் திகதி விஷேட பொதுச்சபைக் கூட்டம் இடம்பெற்றது. கூட்டுறவு துணை விதிகளுக்குப் புறம்பாக இடம்பெற்றதாக 33 பொதுச்சபை உறுப்பினர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளை மையப்படுத்தி கூட்டுறவுச் சங்கங்களின் ஆணையாளரும் பதிவாளருமான பொறியியலாளர் என்.சிவலிங்கம் அவருக்குள்ள அதிகாரங்களுக்கமைவாக பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை 2023.05.17ஆம் திகதியிடப்பட்டு அனுப்பிவைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த பணிப்பாளர் சபை தெரிவின் ஊடாக நியமிப்புச் செய்யப்பட்டுள்ள தலைவர் 46(I) விசாரணைகளுடன் தொடர்புடையவர். குறித்த தலைவரை பதவியில் வைத்துக்கொண்டு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அபிவிருத்தி செய்யமுடியாது என்றும் சில சமயங்களில் ஆவணங்கள், சாட்சியங்கள் இல்லாமலாக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் பொதுச்சபை உறுப்பினர்கள் எழுத்துமூலம் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# NVQ 4 கற்கை நெறி பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்



(சீனக்குடா செய்தியாளர்)

கிண்ணியா வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட இரு பாடசாலைகளில் 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தின் கீழ், பிரயோகத் தோற்ற கற்கையை (NVQ 4) பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை(20) கிண்ணியா வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ. நகூர்கான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிண்ணியா மத்திய கல்லூரி மற்றும் கிண்ணியா மகளிர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 42 மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

கிண்ணியா வலயக்கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் முகம்மது சிராஜ், வலயக்கல்வி அலுவலக 13 வருட உத்தரவாத கல்வித் திட்ட இணைப்பாளர் ஏ.எல். மபாஹிர், இந்திய மத்திய கல்லூரி அதிபர் எம்.முஎவ்பர், கிண்ணியா மத்திய கல்லூரியின் 13 வருட உத்தரவாத கல்வித் திட்ட இணைப்பாளர் எம்.எம்.முனீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சவர்க்கார உற்பத்தி தொடர்பான ஒருநாள் பயிற்சி செயலமர்வு



(பாண்டிருப்பு செய்தியாளர்)

கல்முனை வடக்கு பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி செயலமர்வு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜின் வழிகாட்டலில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.றமீஸ் தலைமையில் பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட இளம் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு சலவைச் சவர்க்கார உற்பத்தி, சம்பு உற்பத்தி மற்றும் கை கழுவும் திரவ சவர்க்காரம் உற்பத்தி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இப்பயிற்சிச் செயலமர்வில் வளவாளராக காரைதீவு பிரதேச செயலக விதாதா வளநிலைய உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ.எம்.ஜெமீர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினார். இதில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ரி.முரசொலிமாறன், ஏ.எஸ்.சிபாயா மற்றும் திருமதி யூ.றமீஸா, பிரதேச செயலக மீடியா ஒருங்கிணைப்பாளர் அரவிந்தன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான காமிலா காரியப்பர், மோகனதாஸ், சோபனா, கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை வடக்கு விதாதாவள நிலையத்தினால் இவ்வாறான பல சுய தொழில் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு வீதி விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி மாணவத் தலைவர்களுக்கான வீதி ஒழுங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மற்றும் ஒழுக்காற்று சபை என்பவற்றின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரிகள் வளவாளர்களாகக் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் கல்லூரி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர். (நிந்தவூர் செய்தியாளர்)

# கல்முனையில் தொழுநோய் பரிசோதனை சிகிச்சைகளை விரிவுபடுத்த நடவடிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை பிராந்தியத்தில் தொழுநோய் பரிசோதனைகளையும் சிகிச்சைகளையும் விரிவுபடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் தேசிய தொழுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ரணவீரவின் பங்குபற்றுதலுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலானது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம்.பசாலினால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.ஏ.வாஜித் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்களும் கிராம சேவகர்கள், சுகாதாரத்துறை ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கல்முனை பிராந்தியத்தில் தொழுநோயைக் கண்டறிவதற்கான பொறிமுறைகளை இலகுபடுத்துவதற்கும் - துரிதப்படுத்துவதற்கும் அதற்கான சிகிச்சைகளை மக்கள் அச்சமின்றிப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை பற்றி மக்களைத் தெளிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும், தேசிய தொழுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தனது உரையின்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொழுநோயைக் கண்டறிதலுக்கான செயற்பாடுகள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தி சிறப்பாக முகாமை செய்வது தொடர்பிலும் தமது திருப்தியை வெளியிட்டிருந்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அல்-அஸ்ஹர் வித்தியாலயத்துக்கு குவைத் தூதரக செயலாளர் விஜயம்

## புதிய கட்டிடத் தொகுதி அமைக்க உறுதி



(சாய்ந்தமருது செய்தியாளர்)

கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் நிலவும் வகுப்பறைத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் பொருட்டு புதிய கட்டிடத் தொகுதியொன்றை விரைவாக அமைத்துக் கொடுப்பதற்கு குவைத் தூதரகம் முன்வந்துள்ளது.

ரஹ்மத் பவுண்டேஷன் தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் இலங்கைக்கான குவைத் தூதுவரின் பிரதிநிதியாக சனிக்கிழமை(20) இப்பாடசாலைக்கு விஜயம் செய்த குவைத் தூதரகத்தின் செயலாளர் அஷ்-ஷெய்க் முஹம்மட் பிர்தௌஸ், இதற்கான உத்தரவாதத்தை வழங்கியுள்ளார்.

பாடசாலை அதிபர் அலி அக்பர் தலைமையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களினால் குவைத் தூதரக செயலாளர் வரவேற்கப்பட்டு கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் நீண்டகாலத் தேவைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு அக்கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து பாடசாலை வளாகத்தை சுற்றிப் பார்வையிட்ட தூதரக செயலாளர் அங்கு நிலவி வருகின்ற பல்வேறு குறைபாடுகளை நேரடியாகக் கண்டறிந்தார்.

இதன்போது கட்டிட வசதிக் குறைபாடு காரணமாக சில வகுப்பறைகள் தகரக் கொட்டில்களில் இயங்கிவருவதனால் மாணவர்கள் மிகுந்த சிரமங்களுடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தன்னால் அவதானிக்க முடிந்ததாக சுட்டிக்காட்டிய அவர், முன்னுரிமை அடிப்படையில் வகுப்பறைக் கட்டிடமொன்றை அமைத்துத் தருவதற்கு குவைத் தூதுவரின் அனுசரணையுடன் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

# வட்டியில்லா உதவிக் கடன் திட்டம் கல்குடாவில் அறிமுகம்





(மீராவோடை செய்தியாளர்)

கல்குடா தொகுதியில் 'வட்டியில்லா கடன் திட்டமொன்றை ஆரம்பித்தல் மற்றும் மஸ்ஜித் முகாமைத்துவத்தின் மூலம் பலமான சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவித்தல்' எனும் தொனிப்பொருளில் விசேட செயலமர்வொன்று சனிக்கிழமை (20) காவத்தமுனையில் இடம் பெற்றது.

கல்குடா ஸகாத் நிதியம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவி எம்.எம்.எம்.தாஹிர் ஹாமி தலைமையில் இடம்பெற்றது. இதில், கல்குடா தொகுதியிலுள்ள துறைசார்ந்த நபர்களை இணைத்துக்கொண்டு கல்குடா தொகுதியில் வட்டியில்லா கடனுதவியை வழங்குவது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், கல்குடா தொகுதி பள்ளி வாசல்களின் நிர்வாகத்தினர், தொழிலதிபர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், வட்டியில்லா கடன் உதவித் திட்டம் தொடர்பாகவும் மஸ்ஜித் நிர்வாக கட்டமைப்பு தொடர்பாகவும் வளவாளர்களாக உடுநுவர சமூக வைத்திய அதிகாரி பாயிக், வெலம்பொட வட்டியில்லா அழகிய கடன் நிறுவன முகாமையாளர் அர்ஷாத் ஏ. டீன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

# போடியார் புலம்பல்!



அனைத்து மத உரிமையும் பாதுகாக்கப் படுமாம் எண்டு போன கிழம பதவி ஏற்ற கிழக்கு ஆளுநர் பொடியன் செந்தில் தொண்டமான் சொல்லியிருக்காரு எலுவா? அடே தம்பி அனைத்து மதங்கள பாதுகாக்கிறன் எண்டு போட்டு உனக்கு முந்தி இருந்த ஆளுநர் பொடிச்சி மேய்ச்சல் தரைகள அபகரித்து சிங்களவரக் குடியேற்றின மாதிரி நீயும் செய்ய வெளிக்கிடாம கிழக்கு மாகாணத்தில நல்ல பணிகள செய்யப்பாரு. இல்லை எண்டா மறுகா உனக்கு எதிராக போராடயும் ஆக்கள் இருக்காங்க மறந்திடாத செந்தில்.!

உலக செய்திகள்

## பப்புவா நியூ கினியாவில்...

# டோக் பிசின் மொழியில் திருக்குறள் வெளியீடு



பப்புவா நியூ கினியா அரசின் அதிகாரபூர்வ மொழியான டேக் பிசினில் (tok pisin) மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட திருக்குறள் புத்தகத்தை பிரதமர் மோடி வெளியிட்டார்.

இதுகுறித்து தமது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள அவர்,

''பப்புவா நியூ கினியாவில், டோக் பிசின் மொழியில் திருக்குறளை வெளியிட்ட பெருமை எனக்கும் பிரதமர் ஜேம்ஸ் மராப்பேவுக்கும் கிடைத்தது. குறள் ஒரு தலைசிறந்த படைப்பு, இது பல்வேறு துறைகளில் மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது.

குறளை டோக் பிசின் மொழியில் மொழிபெயர்க்க எடுத்த முயற்சிக்காக மேற்கு புதிய பிரித்தானிய மாகாண ஆளுநர் மற்றும் சுபா சசீந்திரன் ஆகியோரைப் பாராட்டுகிறேன். ஆளுநர் சசிந்திரன் தனது பாடசாலை படிப்பை தமிழில் கற்று தேர்ந்துள்ளார். திருமதி சுபா சசிந்திரன், சிறந்த பன்மொழி அறிஞராவார்'' - இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# பக்முத் நகரின் அழிவுகள் ஹிரோஷிமாவை நினைவூட்டுகின்றன

## உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி கவலை



''பக்முத் நகரின் அழிவுகள் ஹிரோஷிமாவை நினைவூட்டுகின்றன'' என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி கவலை தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் பக்முத் நகரத்தை ரஷ்யா கைப்பற்றி விட்டதாக கூறப்படும் நிலையில், அந்த நகரம் ஆக்கிரமிக்கப்படவில்லை என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசியபோதே அசர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உக்ரைன் இராணுவத்தினரின் இரகசியத் தகவல்களை பொதுவெளியில் பகிர்ந்து கொள்ள முடியாது.

'பக்முத் ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. ஆனால், அந்த நகரிலிருந்த அனைத்தையும் ரஷ்யப் படைகள் அழித்துவிட்டன. அங்கு எந்தவொரு கட்டடமும் இல்லை. அங்கு எதுவும் இல்லை. ரஷ்ய வீரர்களின் சடலங்கள்தான் உள்ளன. தற்போது அந்த நகரம் உக்ரைன் மக்களின் உள்ளத்தில்தான் உள்ளது.

நிலைமை கடினமாக இருக்கின்றது. பொதுமக்கள் சுற்றி வளைக்கப்பட்டால் கடினமான சூழ்நிலை ஏற்படும். மேலும் பக்முத் நகரின் அழிவுகள் ஹிரோஷிமாவை நினைவூட்டுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் பக்முத் நகரில் 80,000 பேர் வசித்தனர். உப்பு மற்றும் ஜிப்சம் சுரங்கங்களால் சூழ்ந்த அந்த நகரம், முக்கிய தொழில்துறை மையமாக இருந்தது. உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் ஓராண்டுக்கும் மேலாக நடைபெற்று வரும் நிலையில், பக்முத்திலிருந்து மக்கள் வெளியேறியுள்ளனர். அந்த நகரைக் கைப்பற்றினால், அது ரஷ்யா கைப்பற்ற விரும்பும் கிரமாடோர்க்ஸ், ஸ்லோவியான்ஸ்க் பகுதிகளை நோக்கி அந்நாட்டுப் படைகள் முன்னேற வழிவகுக்கும்.

பக்முத்தை ரஷ்யா கைப்பற்றினாலும், போரில் தனக்கு சாதகமான நிலையை ரஷ்யாவால் ஏற்படுத்த முடியாது என்று வல்லுநர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

# நடிகர் சரத்பாபு காலமானார்



பிரபல நடிகர் சரத்பாபு (வயது 71) உடல்நலக்குறைவு காரணமாக நேற்று(22) காலமானார்.

சில மாதங்களுக்கு முன் சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல், உடல் உறுப்பு நோய் அழற்சி பிரச்சினை காரணமாக ஐதராபாத்திலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். செப்சிஸ் நோயால் பாதிக்கப்பட்டு உறுப்புகள் செயலிழந்து அவர் கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இருப்பினும் தொடர்ந்து சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தநிலையில் நேற்று அவர் சிகிச்சை பலனின்றி காலமானார். அவருக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

1973ஆம் ஆண்டு 'இராமராஜ்யம்' என்ற தெலுங்கு படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானவர் சரத்பாபு. தமிழில் 'நிழல் நிஜமாகிறது' என்ற இயக்குநர் கே.பாலச்சந்தர் இயக்கிய திரைப்படத்தில் அறிமுகமானார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ், இந்தி உள்ளிட்ட மொழிகளில் சுமார் 200 படங்களுக்கு மேல் நடித்தவர்.

தமிழில் ரஜினி, கமல் உள்ளிட்ட பிரபல நடிகர்களுடன் பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ளார். 'உதிரிப்பூக்கள்', 'நெஞ்சத்தைக் கிள்ளாதே', 'சிப்பிக்குள் முத்து', 'சங்கர்குரு', 'கஜேந்திரா', 'அருள்', 'புதிய கீதை', 'ஆளவந்தான்' உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்துள்ளார்.

ரஜினியுடன் 'முள்ளும் மலரும்', 'அண்ணாமலை', 'முத்து' உள்ளிட்ட படங்களில் நடித்து சரத்பாபு பிரபலமானவர். கமலுடன் 'சட்டம்', 'சலங்கை ஒலி', 'சிப்பிக்குள் முத்து' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். அவரது மறைவு திரையுலகினரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. ரசிகர்களும் புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர். சரத்பாபு இறுதிச் சடங்கு சென்னை தி.நகரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என தகவல் வெளிவந்துள்ளது.

# பூவும் சால்வையும் வேண்டாம்; புத்தகங்களே போதும்

## கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா கோரிக்கை



கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, தன்னை சந்திக்க வருபவர்கள் அன்பை வெளிப்படுத்த விரும்பினால் பூங்கொத்து, சால்வைகள் அளிப்பதை தவிர்த்துவிட்டு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் சித்தராமையா பதிவிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,

''இனி தனிப்பட்ட மற்றும் பொது நிகழ்ச்சிகளின்போது, மரியாதை நிமித்தமாக எனக்கும் வழங்கும் பூங்கொத்து அல்லது சால்வைகளை வாங்க வேண்டாம் என முடிவு செய்துள்ளேன்.

எனவே, என்மீது அன்பும் மரியாதையும் செலுத்த நினைப்பவர்கள், எனக்கு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்குங்கள். உங்கள் அன்பும் பாசமும் என் மீது தொடர்ந்து இருக்கட்டும்'' என வலியுறுத்தியுள்ளார்.



பெங்களூருவைச் சேர்ந்த பெண்ணொருவர் அவரது கணவர் மீதான அன்பை வெளிப்படுத்தும் வகையில் அவரது பெயரை தனது நெற்றியில் 'டாட்டூ' குத்தியுள்ளார்....

# இஸ்ரேலிய பாதுகாப்புப்படை துப்பாக்கிச்சூடு: பலஸ்தீனியர்கள் மூவர் உயிரிழப்பு; அறுவர் காயம்

இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் பலஸ்தீனியர்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் அறுவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த மோதலையடுத்து இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பலஸ்தீனின் மேற்குக்கரையின் நப்லஸ் நகரிலுள்ள பலாடா அகதிகள் முகாமில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் நேற்று அதிகாலை திடீர் சோதனை நடத்தினர். அப்போது, பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# பதவி விலகும் இலங்கை அணியின் தலைவர்



2018ஆம் ஆண்டு முதல் இலங்கை உதைபந்து அணியின் தலைவராக செயற்பட்டுவரும் சுஜான் பெரேரா, தான் தலைமை பதவியில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார். தனது பதவி விலகல் சம்பந்தமான கடிதத்தை இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில், பீபாவின் தடை நீக்கப்பட்டதன் பின்னர் நான் தேசிய அணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொள்வேன் என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றேன். எனது இந்தப் பதவிக் காலத்தில் என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்துள்ளேன் என்று நினைக்கின்றேன். ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாக செயற்படுவதற்கு மைதானத்துக்குள்ளேயும் வெளியேயும் நான் எனது வீரர்களுக்கு உதவியுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

பீபாவின் விதிமுறைகளை மீறியமைக்காக கடந்த பெப்ரவரி மாதம் முதல் இலங்கை உதைபந்து சம்மேளனத்துக்கு பீபா மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கைக்கு சர்வதேச உதைபந்துடன் தொடர்புபட்ட எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, இந்தியாவில் இடம்பெறவுள்ள இவ்வாண்டுக்கான தெற்காசிய சம்பியன்ஷிப் தொடரில் விளையாடும் வாய்ப்பையும் இலங்கை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலையின் பவள விழா கிரிக்கெட் சுற்றுப் போட்டி

# 'Real Champion 2k03' அணி சம்பியன்



**மாளிகைக்காடு செய்தியாளர்**

கல்முனை கல்விவலயத்தின் கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலய பவள விழாவை முன்னிட்டு இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 2003ஆம் ஆண்டை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட " Real Champion 2k03 " அணியினர் சம்பியனாக முடிசூடிக் கொண்டனர். பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் 2003ஆம் வருட க.பொ.த. சாதாரண தர அணியினைப் பிரதிநிதித்துவப்படுத்தி Real Champion 2k03 " அணியினரும் 2014ஆம் ஆண்டினைப் பிரதிநிதித்துவப்படுத்தி "team 98" அணியினரும் பங்குபற்றியிருந்தனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக " Real Champion 2k03 " அணியின் பைஷால் தெரிவு செய்யப்பட்டதோடு போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக அதே அணியைச் சேர்ந்த நிசாட்கான் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியில் வெற்றி பெற்ற அணிக்கு அதிதிகளினால் வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. இவ் இறுதிநாள் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஏ.எச்.ஏ.ஜெளஸி கலந்து சிறப்பித்ததுடன் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ.அஸ்தர், எம்.ஏ.சலாம், மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு தலைவர் எஸ்.எல்.ஹமீட், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ.எம்.ஜிப்ரி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாய்ந்தமருது அல்-ஹிலால் முதலிடம்





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அண்மையில் நடைபெற்று முடிந்த கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மாணவர்கள் 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களைப் பெற்று பாடசாலைக்கும் சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

பாடசாலை அதிபர் யூ.எல்.நஸாரின் வழிகாட்டலில்இ உடற்கல்வி ஆசிரியை திருமதி எஸ்.ஐ.நஸீஹா பேகம், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.எம்.நுஸ்கி மற்றும் ஏ.எல்.எம். இர்ஷாத் ஆசிரியர் ஆகியோரின் பயிற்றுவிப்பில் மாணவர்களின் முழுமையான ஈடுபாட்டில் இச் சாதனைப் பெருமைகள் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

போட்டி நிகழ்ச்சிகளில் கிடைக்கப்பெற்ற இடங்களும் மாணவர்களின் பெயர்களும் வருமாறு,

12 வயதுக்கு கீழ்ப்பட்ட பிரிவில் 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் சுக்ரி, சாஜித், முஹீத், சிராஸ், அம்மார் ஆகிய மாணவர்கள் பங்குகொண்டு தங்களது அபாரத் திறமைகளால் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுக்கு கீழ்ப்பட்ட பிரிவில் 800மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜே.எம்.ஹஸ்னி முதலிடத்தைத் தட்டிக்கொண்டதோடு 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலாஹி, பிக்ஹ்ரி, அம்ஸர், சாரிக், சுதைஸ் அஹமட், தாபித் யூனுஸ் ஆகிய மாணவர்கள் பங்குபற்றி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

16 வயதுக்கு கீழ்ப்பட்ட பிரிவில் குண்டு வீசுதல் போட்டியில் ஆதில் இரண்டாமிடமும் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுஹைத் மூன்றாமிடமும் 200மீற்றர் ஓட்டப் போட்டியில் அஸாம் மூன்றாமிடமும் உயரம் பாய்தல் போட்டியில் அஸாம் மூன்றாமிடமும் 400மீற்றர் ஓட்டப் போட்டியில் ஹசீப் சதா மூன்றாமிடமும் மற்றும் 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் அஸாம், சஹீத், ஆபித் முஹைடீன், ஹசீப் சதா, சராஹ்ப் அஹமட், ஆதில் ஆகியோர் பங்கு பற்றி இரண்டாமிடத்தையும் 4X400மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் அப்துல்லாஹ், சுஹைத், ஹிஸ்மி, இஹாப், அஸாம், ஹசீப் சதா ஆகியோர் பங்குகொண்டு மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

TATA IPL

**இன்றைய போட்டி**

குவாலிபையர் - 1
சென்னை எதிர் குஜராத்
நேரம் - இரவு 7.30
இடம் - சென்னை

# பெங்களூரை வீழ்த்தி மும்பைக்கு வாழ்வு கொடுத்த குஜராத்

## ப்ளேஆப் சுற்று இன்று ஆரம்பம்

நடப்பு ஐ.பி.எல். தொடரின் லீக் சுற்றில் நேற்று முன்தினம் இரவு பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் ஆர்.சி.பி - குஜராத் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்த தோல்வியின் மூலம் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதல் சுற்றோடு வெளியேறியுள்ளது. பெங்களூர் தோல்வியடைந்த காரணத்தால் மும்பை இந்தியன்ஸ் அணி ப்ளேஆப் சுற்றுக்குள் நான்காவது அணியாக நுழைந்தது.

அதன்படி, சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று ப்ளேஆப் சுற்று ஆரம்பமாகிறது. நடப்பு சம்பியன் குஜராத் மற்றும் சென்னை அணிகள் இன்று குவாலிபையர் - 1 போட்டியில் விளையாடுகின்றன. எலிமினேட்டர் போட்டியில் லக்னோ மற்றும் மும்பை அணிகள் நாளை விளையாடுகின்றன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7